திராவிடநாடு

7 5 61 | வார வெளியீடு | விலை 16 காசு

# என்று செய்வார்?

[ தியாகராசன் ]

அழியாத புகழுடனே விளங்கி வந்த
அருந்தமிழாம் நற்றமிழை ஈழ நாட்டில்
இழிவாக எண்ணுகின்றார். வெட்கம் வெட்கம்
எழுந்துவிட்டார் நந்தமிழர் இழிவைப் போக்க!

விழிக்கின்றார் அமைச்சரெல்லாம் இலங்கைத் தீவில்;
வேட்கைத்தீ கொழுந்துவிட்டு எரிதல் கண்டு,
வழியேதும் தோன்றாத நிலையில் அந்த
வஞ்சகமே உருவான இலங்கை ஆட்சி,

செந்தமிழர் பலபேரைப் பிடித்துச் சென்று
சிறையினிலே வைக்கின்ற கொடுமை காண்பீர்.
இந்நிலைக்கு வருவதற்கா தமிழர் எல்லாம்
ஈழத்தை எழில்பூக்கும் நடாய்ச் செய்தார்?

சிந்துகின்ற தமிழினத்தின் குருதி தன்னை
சிங்களவர் குடித்துவிட்டு வெறிகொள் கின்றார்.
இந்தியத்தின் பேரரசு இவற்றைப் பார்த்தும்
எம்முடிவும் செய்யாமல் இருப்ப தேனோ?

கருப்பர்களின் நாடான காங்கோ பற்றிக்
கவலைமிகக் கொள்கின்ற அமைச்சர் நேரு.
சிறுநாடாம் கியூபாவின் நலத்திற் காக,
சிந்தையெல்லாம் செலவழித்துத் திரிகின் றாரே,

இரும்புமனம் கொண்டோரின் பிடியில் உள்ள
இலங்கைவாழ் தமிழினத்தின் துயரம் தீர்த்து
மறுமலர்ச்சி தமிழரிடை காண்ப தற்கு
வழிவகைகள் நமதுநேரு என்று செய்வார்?

# மிஞ்சிவிட்டது

கனகு

பரபரப்பு ஒன்றுமில்லாமல் நின்று நிதானமாக மாடியறைக்கு ஏறி வந்தான் சுந்தரவதனம். அப்போது பிற்பகல் மூன்றுமணி. வெயில் இன்னும் காய்ந்துகொண்டிருக்கவில்லை. கொதித்திக்கொண்டிருந்தது அந்த அறைக்கு எப்போதோ ஒரு சமயம் அவன் வருவது வழக்கம். அறைக்கு வெளியே நிழற்சரிவுப் பக்கமாக நாற்காலியொன்றைப்போட்டு அதன்மீது அமர்ந்துகொண்டான் சுந்தரவதனம்.

சற்று நேரத்தில் நாலைந்துபேர் மேலே ஏறிவந்தார்கள். அவர்கள் பூத்தொட்டிகள் சுமந்துவந்தார்கள். அந்தப் பூத்தொட்டிகளில் அளவாக மண்ணும், அளவாக எருவும் கலந்து போடப்பட்டிருந்தன. அவைகள் பூஞ்செடிகள் நடுவதற்கோ, விதைகள் விதைப்பதற்கோ சித்தமாக்கப்பட்டன. மேலும் தொட்டிகளும், பூஞ்செடிகளும் வந்தவண்ணமிருந்தன.

“ஓ, ரூப் கார்டன் போடப்போறீங்களா?” என்று கேட்டவண்ணம் சந்திரா மேலே வந்தாள்.

“என்ன, இன்று நினைக்க முடியாத அதிசயம் நிகழ்கின்றது?” என்று பின்னும் கூறியபடி, தன் கணவன் அருகில் வந்து, அவன் அமர்ந்திருந்த நாற்காலியின் விளிம்பைப் பிடித்துக்கொண்டு நின்றாள் சந்திரா.

“நினைக்கமுடியாத அதிசயம் ஒன்றுமில்லை. எல்லாம் நினைத்துச் செய்கின்ற காரியந்தான்”

“என்னிடம் இதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே!”

“இங்கே நடப்பதெல்லாம் உன்னிடம் கேட்டுக்கொண்டுதான் நடக்கவேண்டுமா?”

சந்திரா அதிர்ந்துபோனாள். கணவனுடைய பேச்சு என்றுமில்லாதபடி கடுமை கலந்திருக்கிறதே!

“உம், உம்! கொண்டுவாருங்கள், வரிசையாக வையுங்கள். ஒழுங்காக வையுங்கள்” என்று அடுத்தடுத்து உத்தரவுகள் போட்டுக்கொண்டிருந்தான் சுந்தரவதனம்.

மளமளவென்று காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. தன் பேச்சையும், கவனத்தையும் ஆட்களின் மீதும், தொட்டிகளினமீதும், பூஞ்செடிகளின்மீதும் படரவிட்டுக்கொண்டிருந்தான் அவன். பின்னால் தன் இல்லக்கிழத்தி நிற்பதை அவன் இலட்சியம் செய்துகொண்டதாகக் கூடக் காட்டிக்கொள்ளவில்லை.

சந்திரா துடித்தாள். தன் கணவன் உத்தரவுகள் போட்டுக்கொண்டு போனபோது, தானும் அப்போதைக்கப்போது ஏதாவது சொல்லவேண்டுமென்று அவள் மனம் அடித்துக்கொண்டது, அவன்தான் அவளை இலட்சியமே செய்யவில்லையே!

வெடுக்கென்று சந்திராதிரும்பினாள். திரும்பிப் பாராமல் விருவிரு என்று அவள் கீழே இறங்கிப் போனாள்.

அவள் போவதை இலேசாகத் திரும்பிப்பார்த்தான் சுந்தரவதனம். அவன் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான்.

“பேதைப் பெண், போகட்டும், என் மேல் அவளுக்கு எல்லை இல்லாமல் சினம் பெருகி இருக்கும். பெருகட்டும்” தனக்குள் சொல்லிக்கொண்டான் அவன்.

அவள் சினந்துகொண்டுபோவது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

ஓய்வு ஒழிவு இல்லாமல் அலுவலகமே கதி என்று அங்கே பரபரப்புடன் இயங்கிவரும் சுந்தரவதனம், அன்று அலுவலகத்து அலுவல்களை எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு வந்ததே சந்திராவின் பொருட்டுத்தான். பல நாட்கள் மனத்திலேயே திட்டத்தை உருவாக்கி, அன்று திடீரென்று அந்த மாடித் தோட்டத்தை முனைந்து நிர்மாணிப்பது கூடச் சந்திராவுக்காகத்தான்.

“இந்தத் தெரு ஒரே அடைசலாக இருக்கிறது. நல்ல காற்றே வருவதில்லை. வாரத்தில் இரண்டு நாட்களாவது அலுவலகத்திலிருந்து முன்னால் வந்தால் என்ன? மரங்கள் உள்ள பக்கமாகச் சற்று நடந்துவிட்டு வரலாம்” என்று சந்திரா பல நாட்கள் அவனிடம் கேட்டிருக்கிறாள்.

“மாடியில் நல்ல காற்று வருமே மாலை நேரங்களில்” என்று அதற்கெல்லாம் பதிலாக அவனும் சளைக்காமல் சொல்லி வந்தான்.

“மாடியில் ரூப் கார்டனா போட்டு வைத்திருக்கிறீர்கள்”

இருந்திருந்தாற்போல் ஒரு நாள் சந்திரா வெடுக்கென்று கேட்டுவிட்டாள்.

சுந்தரவதனம் அந்த வேளை பதில் என்ன சொல்வதென்று தோன்றாமல் தடுமாறினான். என்றாலும்,

திடீர் என்று முன்னறிவிப்பு இல்லாமல் மாடித்தோட்டம் போடுவதற்கான எல்லா ஏறபாடுகளையும் செயது கொண்டு “இதோ பார், உனக்காக நான் மாடித்தோட்டம் அமைத்துவிட்டேன். இனி நீ வெட்டவெளிக் காற்றை எண்ணிக்கொண்டு என்னிடம் பேசும்போதெல்லாம் ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்க வேண்டாம். நல்ல குளிர் காற்று கிடைக்கும்படி இதோ செய்துவிட்டேன். நீ வேண்டுகின்ற அளவு இல்லாவிட்டாலும், உன் தேவையை ஓரளவு நிரப்புகின்ற அளவு அந்தக் காற்று உனக்குக் கிடைக்கும். பார், பார் என் ஏற்பாடுகளை” என்று அவளிடம் பெருமையோடு தன் ஏற்பாட்டுச் சிறப்பையும், ஆற்றல் சிறப்பையும் வெளிடவேண்டுமென்று அன்றிலிருந்து அவனுக்கு ஒரே ஆசை.

(4-ம் பக்கம் பார்க்க)

# "ஆலமர நிழல்!"

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (7—5—61) தனிப்பிரதி 16 காசு [இதழ்

**பண்டித கோவிந்த வல்லப பந்த்** மறைவினல் ஏற்பட்ட கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இப்போது காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் 'காரிய'த்தில் ஈடுபட்டிருக்கின்றனர். 'உள்துறை அமைச்சர் பதவி' என்ற இடம் பிரதமர் நேருவின் தனிப்பட்ட மதிப்பைப் பெற்றுவரும் லால் பகதூர் சாஸ்திரியால் நிரப்பப்பட்டிருக்கிறது. ஆனல், அதைவிட, கட்சி ரீதிக்கோட்பாட்டிலும் அரசியல் வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த 'பாராளுமன்றத் துணைத் தலைவர் பதவி' இப்போது காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளே ஒரு பெரும் பரபரப்பைத் தந்துகொண்டிருக்கிறது.

**நேருவுக்குப் பின் யார்?** என்ற இந்தக் கேள்விக்குப் பலரும் பலவகையில் பதிலளிப்பர். ஆனல், 'பாராளுமன்றத் துணைத் தலைவர் பதவி வகிப்பவர்தான் நேருவுக்குப் பின் வருபவராக இருக்கக்கூடும்' என்பது காங்கிரஸ்காரர்களுக்குள் இருந்துவரும் ஒரு 'பழம்பெரும்' நம்பிக்கை. இந்த ஒரே முக்கியத்துவம்தான், இன்று, அப்பதவிக்கான ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் பெரும் பிரச்சினைகளை உண்டாக்கி வருகிறது.

**லால் பகதூர் சாஸ்திரி, ஜகஜீவன்ராம், கிருஷ்ண மேனன், குல்சாரிலால் நந்தா, மொரார்ஜி தேசாய் போன்ற** மத்திய அமைச்சர்களின் பெயர்களும் முன்னள் காங்கிரஸ் தலைவர்களான தேபரும், இந்திரா காந்தியும் இப்பிரச்சினையோடு சம்பந்தப்படுத்தப்படுகின்றனர். நேருவிடம் அவருக்கு இருக்கும் தனிப்பட்ட மதிப்பைக் காட்டி லால் பகதூர் சாஸ்திரியின் பெயர் பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஜகஜீவன்ராமின் ஆதரவாளர்கள் அமைச்சர் பதவியில் அவருக்கு இருக்கும் நீண்ட நாள் அனுபவத்தைக் காட்டுகின்றனர். 'தகுதி'யையும் 'நிலை'யையும், மொரார்ஜி தேசாய்க்கான பண்புகளாகச் சொல்கின்றனர் சிலர். நேருவின் நிழல் கிருஷ்ணமேனன்; எனவே அவர்தான் அப்பதவிக்கு வரலாம் என்று ஆருடம் கணிக்கின்றனர் மிகச் சிலர்.

மத்திய அமைச்சர்கள் அனைவரும் கண் விழிப்பதிலிருந்து கண் உறங்கும் வரையில் இப்பிரச்சினை எப்படித்தான் முடிவுறும் என்ற கேள்வியிலேயே கவனமாயிருக்கின்றனர். மாநில அமைச்சர்களது கண்கள்கூடப் பாராளுமன்றத் துணைத் தலைவர் பதவியில் அமரப் போகும் உருவத்தை மிக்க ஆவலோடு நோக்கிகொண்டிருக்கின்றன, அகில இந்திய காங்கிரஸ் கட்சி, பத்திரிகையாளர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரது கவனத்தையும் கவர்ந்த இப்பிரச்சினையில் பிரதமர் நேரு பல உருவங்களில் காட்சி தருகிறர்.

அவரது ஒரே விருப்பத்தினல் மட்டுமே பாராளுமன்றத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருப்பதுமட்டுமல்லாமல், அதன் முழுப் பொறுப்புமே நேருவின் விருப்பத்துக்கும் முடிவுக்கும் விடப்பட்டுள்ளது.

துணைத்தலைவர் தேர்தல் பிரச்சினையில் தனது பெயர் **எந்த வகையிலும்** ஈடுபடுத்தப்படுவதைத்தான் விரும்பவில்லை என்கிறர். ஆனல் முழுப் பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தானக எந்த ஒருவரது பெயரையும் அப்பதவிக்கான தேர்தலுக்கு முன்மொழியவோ, பிரஸ்தாபிக்கவோ விரும்பவில்லை என்கிறர். ஆனல், அவ்வாறு சில சில ஆதரவாளர்கள் பிரஸ்தாபிக்கும் சில அமைச்சர்களது பெயர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளாததுபோலும், அல்லது அசட்டை செய்வதுபோலும் காட்சி தருகிறர். அமைச்சர்களிலிருந்துதான் துணைத்தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறவில்லை. ஆனல், சமீபத்தில் கட்சிக் கூட்டத்தில் பேசும்போது 'ஏன் அமைச்சர்கள் அல்லாத, ஆனல், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கக்கூடாது' என்று கேட்டிருக்கிறர். துணைத் தலைவர் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடக்கவேண்டும் என்கிறர். ஆனல், தேர்தலுக்காகக் கட்சிக்குள்ளேயே நடக்கும் பிரச்சாரங்களை விரும்பவில்லை எனத் தெரிவிக்கிறர். தனி ஒரு மனிதன் விரும்புகிறர் அல்லது முன் மொழிகிறர் என்பதற்காக எல்லோரும் அப்படியே ஒப்புக்கொண்டுவிடக்கூடாது என்பது அவர் கட்சிக் கூட்டத்தில் உதிர்த்த கருத்து. ஆனல், நேரு யாரேனும் ஒருவரது பெயரை வெளிப்படையாக முன் மொழிந்தால் அதை அனைவரும் அப்படியே போட்டியின்றி ஒப்புக்கொள்ளுவர் என்ற ஒரு நிலை கட்சியில் இருப்பதும் நேரு அறியாததல்ல.

துணைத்தலைவர் பதவி தனக்குக் கிடைக்காவிட்டால் மொரார்ஜிதேசாய் சொந்த மாகாணத்துக்கே திரும்பி விடுவார் என டெல்லி வட்டாரத்தில் பேச்சு இருப்பதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை சமீபத்தில் எழுதிற்று. அதே போல், ஜகஜீவன்ராம் இப்பதவியினின்றும் நிராகரிக்கப்பட்டால் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் முக்கியத்துவம் தள்ளப்பட்டுவிட்டதாக ஆகிவிடும் எனப் பயமுறுத்தலோடு கலந்த கருத்தைத்தருகின்றனர். சிலர் இதற்கு நடு

வில் மற்றொரு விறுவிறுப்பான செய்தியும் உலவிவரு கிறது. "துணைத்தலைவர் பதவிக்குப் பொருத்தமான ஒருவர் தேவைப்படுகிறார் என்றால் அது இந்திராகாந்தியாக இருக் கட்டும்" என்று ஒரு "குடும்ப அரசியலை" 'பளிட்ஸ்' வார ஏட்டில் உருவாக்கிக் காட்டினர் ஒரு புகழ்பெற்ற அரசி யல் விமர்சகர்! (P. R. Lele)

துணைத்தலைவர் பதவிக்கான பெயர்கள் பேசப்படு வதில் நேருகேட்டும் கேளாதவர்போலும், கண்டும் காணா தவர்போலும் இருக்கிறார். அப்பதவிக்கு மொரார்ஜி தேசாய் வரவேண்டும் என்று விரும்புவர்களும், ஜகஜீவன் ராமின் பெயரை முன்மொழிபவர்களும். எஸ். கே பாட் டிலை நினைவுபடுத்துபவரும் ஆகிய அனைவருமே நேருவின் தோற்றத்தின்முன் மௌனிகளாகின்றனர். பதவிக்கான தேர்தலின் முக்கியத்துவத்தைக் குறைத்துப்பேசுவதன் மூலமும், அப்பதவி வகிப்பவர்கள்தான் தன்னையும் தன் பதவியையும் பின்பற்றமுடியும் என்று நினைக்கவேண்டிய தில்லை என்று கூறிவருவதன்மூலமும் பிரதமர் நேரு அவர் களையெல்லாம் தான் வெளிடப்போகும் அல்லது கருதும் ஒரு முடிவுக்கு ஒத்துப்போகக்கூடியவர்களாக மாற்றி யிருக்கிறார். இப்போது, துணைத் தலைவர் பதவியை இரண்டு பேரிடம் ஒப்படைக்கலாம் என்ற பண்டித நேரு வின் கருத்தைப் பெரும்பாலோர் ஒப்புக்கொண்டிருப்ப தாகவும் தெரிகிறது.

நேரு—ஒரு ஆலமரம். அது பரந்த நிழலைக் கொடுத் துக்கொண்டிருப்பது உண்மைதான். ஆனால் அதனடியில் வேறு மரங்கள் உற்பத்தியாகமுடியாமலிருப்பதும் உண்மை தான், என்ற வர்ணனை ஒரு காங்கிரஸ் அமைச்சர் தந்தது தான்.

ஆலமரம் தனது நிழலில் வேறு மரங்களை வளரவிடு வதில்லை என்பது என்னவோ உண்மைதான் ஆனால், தனது விழுதுகளை பூமியில் இறக்கித் தன் இள மரங்களை உற் பத்திசெய்யும் போக்குப் படைத்தது என்பதும் அனைவரும் அறிந்த உண்மையே. அந்தப் பத்திரிகை விமர்சகர் பாராளுமன்றத் துணைத்தலைவர் பதவிக்கான தேர்தல் இந்திராகாந்தியின் பெயரைப் பிரஸ்தாபித்திருப்பது இப்போதைக்கு ஆச்சரியமாகவும் கேள்விக்குரியாகவும் தோன்றலாம், ஆனால் அது எதிர்காலத்தில் நிகழப் போகும் உண்மையாக ஏன் இருக்கக்கூடாது?

ஜனநாயகத்தைப்பற்றிப் புதிதாகப் பேசுபவர்களும், தலைமைப்பதவிக்கு புது இலக்கண இலக்கியம் வகுப்பவர் களும் இந்த ஆலமர நிழலைச் சற்று நோக்கவேண்டும்.

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

இடையில் வெறொரு விசித்திர எண் ணம் அவன் உள்ளத்தில் புகுந்து கொண்டது. சந்திராவுடன் வெறுப் போடு பேசுவதுபோல் நடித்து. அவள் சினத்தை மூட்டிவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டுமென்று நினைத்தான் அவன். அந்த விருப்பை நிறைவேற் றிக்கொள்ளும் முறையில்தான் மாடி யில் அவளுடன் வெறுப்பை நடிப்பில் காட்டி அப்படிப் பேசினான்.

மாடித்தோட்டத்து வேலைகள் எல் லாம் முடிந்த பிறகுதான் சுந்தரவத னம் கீழே இறங்கி வந்தான். எண் ணியதை இனிதே முடித்தாகிவிட்டது என்ற பெருமிதம் உள்ளத்தே துள் ளிக் குதிக்க நேரே சந்திராவின் அறைக்குச் சென்றான் அவன்.

பகல் மறைந்து இருள் சூழ்ந்து கொண்டுவிட்டது. மற்ற அறைகளில் எல்லாம் விளக்குகள் ஏற்றப்பட் டிருந்தன. சந்திராவின் அறையில் வெளிச்சத்தையே காணோம்.

"ஒரு வேளை அவள் வெளியில் போயிருப்பாளோ! நான் அவளிடம் விளையாட்டுக்காக முகம் கொடுத்துப் பேசாமல் இருந்ததை அவள் வேறு மாதிரி எடுத்துக்கொண்டுவிட் டாளோ! பரவாயில்லை. இப் போதைக்கு அவள் அப்படியே எடுத் துக்கொள்ளட்டும். பிறகு தானே உண்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளமாட்டாளா என்ன?

தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான் சுந்தரவதனம். அவ னும் வெளியில் கிளம்பினான்.

சுந்தரவதனம் திரும்பி வந்தபோது இரவு பத்துமணிக்குமேல் ஆகிவிட் டது. வீட்டில் வேலைக்காரர்கள் மூலைக் கொருவராக நின்று தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். சந்திரா அவன் கண்ணிற் படவில்லை. "சந்திரா எங்கே?" என்று அங்கே தலையைச் சொரிந்துகொண்டு, தூக்கக் கலக் கத்தை முகத்தில் காட்டியபடி நின்ற வேலைக்காரனைக் கேட்டான் அவன்.

"அவங்க இன்னும் எழுந்து வர லீங்க!"

"எழுந்து வரவில்லையா? அப்படியா னால் முன்னமேயே வந்து படுத்துக் கொண்டுவிட்டாளா?"

"இல்லீங்க, சாயந்திரத்திலே யிருந்து படுத்திருக்கிறாங்க. சாயந் திரம் காபிகூடச் சாப்பிடல்லே!"

"என்ன!" என்று வியப்புப் பெரு மூச்சு விட்டபடி சந்திராவின் அறைக்கு ஓடினான் சுந்தரவதனம்.

அறை விளக்கேற்றப்படாமல் கிடந் தது. கதவு தாளிடப்படாமல் இருந் தது. சட்டென்று விளக்கைப் போட் டான் சுந்தரவதனம். சந்திரா படுக் கையில் கிடந்தாள்.

"சந்திரா, சந்திரா!"

நின்றுகொண்டு விளித்தான் அவன்.

பதில் இல்லை

கட்டிலில் அமர்ந்து அவளைத் தொட்டுப்பார்த்தான்.

"என்ன இது! உடல் கொதிக் கிறதே'—சந்திரா, சந்திரா"

திரும்பவும் அழைத்தான்!

அவளிடமிருந்து அப்போதும் பதில் இல்லை, விசும்பல் வந்தது. முகத் தைத் தலையணையில் புதைத்துக் கொண்டு கிடந்தாள் அவள் உடல் அடிக்கொரு தடவை குலுங்கியது.

திரும்பவும் உடலைத் தொட்டுப் பார்த்தான் அவன். அது மேலும் கொதிப்பதுபோல் தோன்றியது. ஆமாம், உள்ளத்துக் காய்ச்சல் மெல்ல மெல்லப் பரவி உடல் எல் லாம் கவிந்துகொண்டுவிட்டது.

இப்போதுதான் சற்றே உணர்ந்த வன்போல் சுந்தரவதனம் திகைத்

( 15-ம் பக்கம் பார்க்க )



# குலக்கொடி

அந்தத் தீவுக்குப் பெயர் அடிமைத் தீவு. அந்தப் பெயர் அதற்குப் பொருந்துவதாக இல்லை. காரணம், அடிமை எனும் சொல்லின் குணமாகவோ, தன்மையாகவோ பெறப்படும் பொருளில் அத்துணைக் கடுமை இல்லை; கொடுமை இல்லை. அந்தத் தீவை மொத்த நோக்கோடு பார்த்தாலும் சரி, அந்தத் தீவெங்கணும் நிறைந்து, குவிந்து, நெருங்கிக் கிடக்கும் ஒவ்வொரு செயலினையும், பகுதிப்படுத்தி, தனித்தனி நோட்டமிட்டாலும் சரி, அங்கே—அவ்வவற்றில் மலிந்து கிடக்கும் கொடுந்தன்மைகளுக்கும், கடும் நிலைகளுக்கும் எதிரில் அந்தச் சொல், — அடிமை எனும் சொல், இதமான சொல், எழிலான சொல், இனிமை நிறைக்கும் சொல்.

வெயில் காயும் பகல் வேளையில், அந்தத் தீவு எங்கணும் தானாகவே நெருப்பு மூண்டு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும். இருள் கவிந்த உடனேயே பனிச் சூறை கண் மண் தெரியாமல் வீசிக் கொண்டே இருக்கும்.

பத்துப் பதினைந்து தலைமுறைகளாக ஒரு கூட்டம் அங்கே சிறை வைக்கப்பட்டுக் கிடக்கின்றது. அந்தக் கூட்டம் தப்பிச் சென்று தன் உரிமை நிலத்தைக் கண்டுகொண்டு விடாமல், அறியாமை எனும் காவற் கோட்டங்கள் அங்கங்கே அமைந்திருந்தன. பின்னும், அந்த அறியாமையின்பாற்பட்ட பிற்போக்குத் தன்மை, அழுக்காறு, மூட நம்பிக்கை, தன்னலப் பெருக்கு ஆகியன அந்தக் காவற் கோட்டங்களின் ஏவற் கூடங்களாக எங்கணும் நிரம்பி இருந்தன.

சுற்றும் சூழ்ந்து கிடந்த கத்துங் கடலோ பேரச்சம் விளைத்துக் கொண்டே இருந்தது. சிறை வைக்கப்பட்டுக் கிடந்த கூட்டத்திலிருந்து யாரேனும் ஒருவனோ—ஒரு வேளை அந்தக் கூட்டம் முழுதுமோ அந்த அடிமைத் தீவில் காவல் காத்து நிற்கும் அறியாமையையும், அதற்குத் துணை நிற்பனவற்றையும் எதிர்த்துத் தாக்கிவிட்டு, வெளியேறி வந்தால், அந்த மாகடலைக் கடந்துதானே உரிமை நிலத்தை அடைய வேண்டும்?—அந்த மாகடலில் தன் முனைப்பு என்னும் பெரும் புயல் ஓயாமல், ஒழியாமல் பேரலைகள் எழுப்பிக் கொந்தளிப்பை உண்டாக்கிக்கொண்டே இருந்தது. அந்தக் கொந்தளிப்பையும் மீறி நீந்திச் செல்லும் வல்லவன்

க. இராசன்

எவனேனும் தோன்றிக், கடலில் குதித்துக், கடந்து செல்ல முனைந்தால், அவனைக் கடலிலிருந்தவாறே தாக்கி வீழ்த்துவதற்கு அங்கே பேராசை என்னும் திமிங்கிலங்கள் சுற்றிச் சுற்றி வந்தன. வீண் செருக்கு என்னும் பெரு முதலைக் கூட்டம் அணிவகுத்து நின்றன.

பத்துப்பதினைந்து தலைமுறைகளாக அந்த அடிமைத் தீவிலே அடைபட்டு, அங்கே நிரம்பிவழியும் பல்வேறு வகைப்பட்ட அல்லல்களையும் துய்த்துத் துய்த்துப் பழக்கப் பட்டுப்போன முன்னிலையால், அந்தப் பெருங்கூட்டத்தின் மிகப்பெரும் பகுதிக்கு உரிமை நிலம் என்றால் என்ன, அடிமைத் தீவு என்றால் என்ன என்று பகுத்துணர்ந்து பார்க்கும் நுண்ணறிவும், ஆற்றலும் இல்லாமற்போய்விட்டன. 'இந்தஅடிமை நிலந்தான் உயர்வானது; இங்கு வாழும் வாழ்வுதான் சிறப்பானது. இதனினும் சிறந்த ஒன்று வேறு எங்கோ இருப்பதாக யாரேனும் சொல்லவந்தால் அதை நம்பாதீர்கள்! நம்பவேண்டாம்! அது வெறும் கற்பனை; அப்படி ஒன்றை அடைவது மனித ஆற்றலால் நடவாத அதீதம்' என்று அறியாமைக் கோட்டத்திலிருந்து அப்போதைக்கப்போது அறிவுரைகள் எனும் பெயரில், யோசனைகள் எனும் பெயரில் கட்டளைகள் வந்தவண்ணமிருந்தன. அந்தக்கட்டளைகளையே பேரறிவுரையாக ஏற்று, எடுத்துக்கொண்டு இருட்டுலகில் உலவிவந்தது அந்தக் குருட்டுக் கூட்டம்.

எப்படியோ அந்த அடிமைப்பட்ட கூட்டத்தில் ஒருவன் தோன்றினான். அவன் பிறவித் தலைவன்.

“நாம் இப்போது வாழ்ந்து கிடப்பது அடிமைத்தீவு. உண்மையில் நாம் இங்கு வாழவில்லை. உழன்று கொணடு கிடக்கின்றோம். துன்பம் உழந்து, துயருழந்து, அலமந்து கிடக்கும் இந்த நிலையிலேயே நம் இனம், என்றென்றும் வீழ்ந்துகிடந்த இனம் அல்ல.

“ஒரு காலத்தில் நாமும் உரிமையோடு நம் சொந்த நிலத்தில் வாழ்ந்துவந்தோம். அந்த உரிமை நிலத்தில் துன்பம் எனும் தேள்வந்து எடுத்ததற்கெல்லாம் கொட்டுவது கிடையாது. காரணம் அந்தத்தேளே அங்கு இல்லை. மிடிமைப்பாம்புவந்து தீண்டுவது கிடையாது. அந்தப் பாம்பை அங்கு காணவே முடி

யாது. திரும்பவும் நாம், நம் அரும் உயிர்மூச்சாம் உரிமை நிலத்தை அடையவேண்டும். அதற்கு ஆவன செய்ய இன்றே தொடங்க வேண்டும்''

அந்தப் பிறவித் தலைவனின் பேச்சைக் கேட்டுச், சுற்றி நின்ற கூட்டம் முழுதும் ஏளனம் செய்தது.

"இப்போது நாம் அடிமையாம். இனிமேல் நாம் பெறப்போவது உரிமையாம். துன்பத் தேளாம்! மிடிமைப் பாம்பாம்! ஒரு காலத்தில் நாம் உரிமையோடு வாழ்ந்தவர்களாம்! என்ன பேச்சு! எல்லாம் ஒரே அளப்பு!''

அஞ்சவில்லை அந்தத் தலைவன். அந்த அறியாத கூட்டத்தின் இகழ்ந்துரையையும், எள்ளலையும் கண்டு 'என்னே இவர்களின் அறியா நிலை!' என்று இரங்கினான் அவன். சிந்தித்தான், பின்னும் அவன் அந்தக் கூட்டத்தின்—தன் இனத்தின் அறியாமையைப் போக்குவது எவ்வாறு என்பது பற்றி; ஆழச் சிந்தித்தான்.

ஏளனமாகப் பேசிய கூட்டத்திலிருந்த இருவர் ஒரு நாள் தாமும் சிந்தித்துப் பார்த்தனர். அந்தத் தலைவன் சொல்வதில் இருக்கின்ற உண்மை மெல்ல மெல்ல அவர்கள் உள்ளத்திற் புலப்பட்டுக்கொண்டு வந்தது.

"ஆமாம், நம் உரிமை நிலத்தை அடைவதற்கு வழி என்ன சொல்கிறீர்கள்?''

அவர்கள் இருவரும் இந்தக் கேள்வியை அந்தத் தலைவனிடம் போட்டனர்.

"இதோ பாருங்கள்!'' என்று தன் மடியிலிருந்த சிறு பொட்டலம் ஒன்றை எடுத்து உள்ளங்கையில் வைத்துப் பிரித்துக் காட்டினான் அந்தத் தலைவன்.

வந்தவர்கள் இருவரும் பிரித்துக் கிடந்த அந்தப் பொட்டலத்தை உற்று நோக்கினர்.

"என்னவோ விதைகள் மூன்று! ஏன் இந்த விதைகள்?''

"இந்த விதைகளை நட்டு வளர்க்க வேண்டும். இந்த மூன்று விதைகளும் அற்புதமானவை. இவை மூன்றையும் ஒரே இடத்தில் நட வேண்டும். ஒன்றாகவே வளர்க்க வேண்டும். இவை கொடியாக வளரும்.''

"இவை கொடியாக வளர்வதில் என்ன பயன்? அதற்கும் நாம் உரிமை நிலத்தை அடைவதற்கும் என்ன தொடர்பு?''

"நாம் நம் உரிமை நிலத்தை அடையவேண்டுமானால், முதலில் நம்மைச் சூழ்ந்து நிற்கும் அறியாமை எனும் கோட்டையைத் தரைமட்டமாக்கவேண்டும். வெறும் வலிமை கொண்டு அந்த அறியாமைக் கோட்டையைத் தகர்க்கமுடியாது. இதோ இந்த விதை இருக்கின்றதே, இதை நட்டு வளர்த்தால், இதிலிருந்து ஒருவகை உயிராற்றல் பிறந்து பரவும். அந்த உயிராற்றல் பரவப் பரவ, அது, சுற்றிலுமுள்ள அறியாமைக் கோட்டத்து மன நிலையை மாற்றிக்கொண்டுவரும். அந்த அறியாமை எனும் நிலை மாற மாற, அதற்கு அரணாக நிற்பனவெல்லாம் மெல்ல மெல்லப் பின்வாங்கி ஓடத் தொடங்கும். அறியாமையின் காவலர் பின்வாங்கப் பின்வாங்க, அங்கே அறிவு சுடர்விடும். அறிவு சுடர்விடச் சுடர்விட, அங்கே உண்மை புலப்படும். உண்மை புலப்படப் புலப்பட, நம் அரும் உரிமை நிலத்தை நாம் அடைந்தே தீரவேண்டும் என்ற வேட்கை அடிமைப்பட்டோர் உள்ளத்தில் எல்லாம் கனன்று கொண்டு எழும். அந்த வேட்கையை நாம் உரமூட்டி வளர்த்துவிட்டால், நம் உரிமை நிலத்தை விரைந்து பெறுவது எளிது, எளிது, எளிது!''

"ஆமாம், மூன்று விதைகள் எதற்கு? ஒன்றை மட்டும் விதைத்தால் போதாதா?''

"இந்த மூன்று விதைகளும் முளைவிட்டு வளர்ந்தால் மூன்று வகை ஆற்றலைப் பெறலாம். ஒவ்வொரு விதைக்கும் ஒருவகை ஆற்றல் தனித்தனியே உண்டு. அந்த ஆற்றல்கள் தனித்தனியே இருப்பதைப் பார்க்கிலும், ஒன்றாக இணைந்து வளர்வதில்தான் நன்மையும் உண்டு. அவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வளரவேண்டும். அதோடு கூட, இந்த மூன்று விதைகளின் வளர்ச்சியும் விசித்திரமானது. இவை மூன்றையும் ஒரே இடத்தில், ஒரே சமயத்தில் நட்டு வளர்த்தால் தான் இவை நன்றாகவளரும்; செழிப்பாக வளரும். நாம் எதிர்பார்க்கும் முறையில் படர்ந்து பரவும். ஒன்றை விட்டுவிட்டு ஒன்றை வளர்த்தால் எதுவுமே செழிப்பாக வளராது. ஒன்றை ஒரு சமயமும், பிறிதொன்றை வேறு சமயமும் நடுவது கூடாது. மூன்றும் ஒரே சமயம் நடப்படவேண்டும். ஒரே இடத்தில் நடப்பெறவேண்டும்.''

"ஒவ்வொன்றுக்கும் தனித்தனி குணமும், தனித்தனி ஆற்றலும் உண்டோ?''

"ஆமாம், ஒன்று அறியாமையை உணர்த்தி எடுத்துக்காட்டிக் கொண்டு நிற்கும். மற்றொன்று தன் முனைப்பால் ஏற்படும் தீய செயல்களை எதிர்த்து வெருட்டியோட்டும் ஆற்றலை உண்டாக்கும். பிறிதொன்று உரிமை வேட்கையையும், அந்த வேட்கையைத் தணித்துக் கொள்ளும் கடமை உணர்வையும் எங்கணும் பரவவிடும்.

"இந்த வகை உணர்வும், ஆற்றலும் இன்றைய நிலையில் நமக்கு மிக மிகத் தேவை. ஏனென்றால், வெறும் அறியாமையைப் போக்கி விடுவதால் மட்டும் நாம் எடுத்த காரியத்தை—நம் உரிமை நிலத்தை நம்மதாகப் பெற்று, விடுதலை எய்துவதை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. அறியாமையை ஒதுக்கித் தள்ளுவதோடு அநீதியையும் எதிர்த்து நிற்க வேண்டும். அநீதியை எதிர்த்துச் சும்மா வெறும் போராட்டம் நடத்தினால் மட்டும் போதாது. விடுதலை வேட்கையும் உண்டாகவேண்டும். அப்போது தான் நம் உரிமை நிலத்தை நம்மால் அடைய முடியும்.

"அறியாமை ஒழியாமல் விடுதலை வேட்கை—உணர்வு உண்டாக முடியாது. விடுதலை வேட்கை இல்லாத அறியாமை நீக்கம் ஒன்றுக்கும் பயன்படாது. விடுதலை வேட்கையும், அறியாமை நீக்கமும் ஆகிய இரண்டு மட்டும் எய்திவிட்டாலும் போதாது. அவற்றோடு அநீதியை எதிர்த்து வலிவோடு போராடச்—செயல்புரிய அஞ்சாமையும் வேண்டும். எனவே, இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். அப்போது தான் விடுதலை விடியும். கெடுதல் முடியும்.''

"அப்படியானால் இந்த மூன்று விதைகளையும் இப்போதே நட்டுவிடலாமே?''

"நட்டுவிட்டால் மட்டும் போதாது. அவை நல்ல முறையில் முளைவிட்டு, ஒரே கொடியாக இணைந்து, பிணைந்து வளரவும் வகை செய்ய

வேண்டும். அப்படி வளருகின்ற கொடியைக், கண்ணை இமை காப்பதைவிடப் பன்மடங்கு மேலாக, சிறப்பாகப் பாதுகாக்க வேண்டும். அது மட்டுமல்ல, இந்த அடிமை நிலம் வறண்டு கிடக்கும் பாலை. இதிலே தண்ணீரும், வெறும் உரமுமிட்டு வளர்க்கக்கூடிய எந்தச் செடியையும், எந்தக் கொடியையும் வளர்க்க முடியாது.''

"நாம் விதைபோட்டு வளர்க்கப் போகும் கொடியோ, வெறும் தண்ணீரால் வளரக் கூடியது அல்ல. வெறும் உரமிட்டுவிட்டால் செழிப் படைந்துவிடக்கூடியது அல்ல.''

"வெறும் தண்ணீரும் உரமுமில்லாமல் வேறு என்ன தேவை அந்தக் கொடிவளர?''

"வேறு என்ன தேவை!—நம் கண்களிலிருந்து வடியும் துன்பக் கண்ணீர் தேவை. நம் உடலிலிருந்து—அநியாய அட்டூழியத்தை எதிர்த்துப் போராடும்போது அடிபட்டு, வெட்டுப்பட்டு—வழிந்தோடும் வேதனைச் செந்நீர் தேவை. வெறும் ஆனந்தக் கண்ணீரும் பயன்படாது. துன்பத்தால் அல்லாமல், வேறு வகையிற் கொட்டும் செந்நீரும் தேவை இல்லை.''

விளக்கம் கேட்கவந்தவர் இருவரும் வாயடைத்து நின்றனர்.

நன்ருகச் சிந்தித்துப் பாருங்கள். பதிலேதும்உண்டானல், நாளை காலையில் வந்து பகருங்கள்''

தலைவன் கூறினன் கனிவுமிகுந்த கணீரெனும் குரலில். வந்தவர் இருவரும் தயங்கிநின்றனர்.

கடைசியில், "சிந்தித்து நல்ல முடிவோடு, இன்னும்சிலரோடு நாளை வருகிறோம்'' என்று கிளம்பிச சென்றூர்கள் அவர்கள்.

மறுநாள், தலைவனே பெருவியப்பில் ஆழ்ந்துவிட்டான். அவன் எதிரில் சிலர் வந்துநிற்கவில்லை. ஒரு கூட்டமே வந்துநின்றது. முதல்நாள் வந்தவர் இருவரும் பெருமிதத்தோடு பேசினர்கள்.

"எம்மரும் வழிகாட்டியே! விடுதலை உணர்வை இந்த அடிமைத் தீவெங்கணும் பரப்பவந்த செம்மலே! இதோ இந்தக் கூட்டம் முழுதும் உங்கள் கட்டளைக்காகக் காத்திருக்கின்றது. இதுதான் சரியான சந்தர்ப்பம் உங்கள் கையில் வைத்திருக்கும் விதைகளை நடுவதற்கு-விதைப்போம் விடுதலை உணர்வாம் அந்த விதைகளை இன்றே! வளர்ப்போம் கண்ணீரும் செந்நீரும்விட்டு, காப்போம் உயிரைத் திரணமாக மதித்து அந்தக் கொடியினை. விடுதலைநல்கி,நாம்உயருவதற்காகவளருகின்ற அந்தக் கொடியினை எப்பாடு பட்டேனும் வளர்ப்போம்.''

'இதுதான் தக்க சமயம். இப்போதே இந்த விதைகளை நடுவோம்!' தலைவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆரவாரப் பேரொலி எதுவுமே இல்லாமல் விதை நடப்பட்டது. நட்டுமுடிந்ததும் தலைவன் சொன்னுன்.

"இதோ நட்டுவிட்டோம் விதைகளை. இது பெரிதல்ல. இதை மிகமிக விழிப்போடு காக்கவேண்டும். சற்று விழிப்புக் குறைந்தாலும், சற்றே உள்ளம் தளர்ந்தாலும், இதன் வளர்ச்சி குன்றும். இப்போது, இந்த விதைகளை நடுகின்ற இந்த வேளையில் உங்கள் உள்ளங்களில் எவ்வளவு அழகாக இந்தவிதைகள்செழித்தோங்கி வளரவேண்டுமென்ற எண்ணம் உள்ளதோ, அந்த எண்ணம், அந்த ஆர்வம் என்றென்றும் நிலவ வேண்டும். உரிமை நிலத்தை அடையும்வரை, வீடு பெறும்வரை உங்கள் ஊக்கமும், உற்சாகமும், போராட்ட மனப்பான்மையும் குறைந்துவிடக் கூடாது. அதுமட்டுமல்ல. வளரப் போகும் இந்தக் குலக்கொடியின் ஒவ்வொரு நிலையிலும், நம்மீது இன்னல் வந்து தாக்குதல் நடத்திக் கொண்டே இருக்கும். இந்தக் குலக் கொடி வளர, வளர எதிரிகள் இதனை அறுத்தெறிய எல்லா வகையிலும் முயல்வார்கள். எந்தெந்த வகையில், வழியில், முறையில் பகைவர் நம்மீது தாக்குதல் நடத்துவார்கள் என்று நாம் எண்ணுகின்ரேமோ, எதிர்பார்க்கின்ரேமோ, அந்தந்த வகைகளில் மட்டுந்தான் நம்மீது பகைவரின் தாக்குதல் நடைபெறுமென்று எண்ணி இருந்துவிடக் கூடாது. நாம் சற்றும் எதிர்பாராத முறைகளின்மூலம் எல்லாம், வழிகளின், இடங்களின் மூலமாகவெல்லாம் நாம் தாக்கப்படுவோம். நாம் முன்னேறிச் செல்லும் ஒவ்வோரடிக்கும் ஆயிரமாயிரம் வீரர்களைப் பலியிடவேண்டும். அந்த வீரர்கள் கொட்டும் குருதி பெருகப் பெருகத்தான் — அந்த வீரர்கள் பலியாகும் வேளை, அவர்களின் உற்றபெற்ற சுற்றமனைத்தும் சொரிகின்ற கண்ணீர் நிறைய நிறையத்தான், இதோ இந்தக் குலக்கொடியின், நம் மரும் குலக்கொடுயின் வளர்ச்சியைக் காணமுடியும்.

"அதுமட்டுமல்ல; நம்முடைய உற்சாகத்தைக் குறைப்பதற்காக, நம் போராட்ட ஆற்றலைச் சிதைப்பதற்காக, நம்மிடையே ஒற்றுமை இன்மையை உண்டாக்கப், பகைவர்களால் என்னென்ன முடியுமோ, அவ்வளவும் செய்வார்கள். நாம் ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொள்ளவும், ஒருவரை ஒருவர் வேற்றுமை உணர்வோடு நோக்கவும் ஒருவர்மீது ஒருவர் வெறுப்பைக் கொட்டவும், ஐயப்பாடு கொள்ளவும் எத்தனை விதமான கட்டுக் கதைகளைக் கட்டிப் பரப்பமுடியுமோ, அத்தனை விதமும், அவற்றிற்கு அப்

# தொல்லை தருமாம்!!

**தமிழையும் ஆட்சி மொழியாக்கவேண்டும் என்று வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்திவரும் அறப் போர் குறித்து இலங்கை அரசுக்கு ஏதாவது அறிவுரை தந்துள்ளாரா என்று நேருவிடம் இன்று இங்கு நடைபெற்ற காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சியின் கூட்டத்தில் கேட்கப்பட்டது.**

***அதற்கு நேரு மறுமொழி அளித்திருப்பதாவது:—***

"இதுகுறித்து ஏதாவது சொல்வது தொல்லைதருவதாகும். ஒருவர் அறிவுரை தரவேண்டியிருந்தால், அது மிகவும் தனிப்பட்டதும், சம்பிரதாயமில்லாததுமான முறையில் தரப்படுவதாகும்.''

பாற்பட்ட விதமும் கட்டிப் பரப்பி விடுவார்கள்.''

இவ்வளவும் சொன்னான் தலைவன். எல்லாவற்றையும் விழிப்போடு சமாளிக்க முடியும் என்று உறுதி கூறிற்று அந்தக் கூட்டம்.

தலைவன் மகிழ்ந்தான். விடுதலை பெறும் நாள் — உரிமை நிலத்தை அடையும் நாள் தொலைவில் இல்லை என்று இறுமாந்து பெருமிதத்தோடு செயலாற்றினான்.

வளர்ந்தது குலக்கொடி. அது வளர வளர, அது படரப் படர, அந்த அடிமைத் தீவின் அறியாமைக் கோட்டம் ஆட்டம் கண்டுகொண்டு வந்தது. அந்த ஆட்டத்தின் முன்னிலையால் அந்தக் கோட்டத்தின் ஒரு பகுதி அறிவு விளக்கம் பெற்றது. பிறிதொரு சிறு பகுதி மண்டைக் கனத்தின் ஏற்றத்தால் மதியிழந்து வெறிகொண்டு நின்றது. அந்த வெறி கண்மண் தெரியாத வெறி. அது எல்லாவித அட்டூழியங்களையும் புரிந்தது. அதற்குப் பலியானோர் பல்லாயிரவர். அதன் மூலம் விளக்கம் எய்தி விடுதலை வேட்கை பெற்றோர், இலட்சக்கணக்கானோர்.

வளர்ந்தது குலக்கொடி. அந்த அடிமைத் தீவெங்கணும் அது தண் மணம் பரப்பிற்று. பகற்போதில் அந்தத் தீவெங்கணும் மூண்டெரியும் வெய்ய தீ விரைந்து தணிந்து கொண்டு வந்தது. இருள் வேளை பார்த்துப் படை எடுத்து வரும் பெரும் பனிச் சூறையும் குறைந்து, குறைந்து மென் காற்றாக மாறிக் கொண்டுவந்தது.

அந்தக் குலக்கொடியின் தண் மணம் சுற்றிலுமிருந்த கத்தும் கடலிலும் பரவிற்று. அந்தத் தண் மணம் அந்த மாகடலில் பேராட்சி புரிந்து வந்த பேராசை எனும் திமிங்கிலங்களின் கொட்டத்தை ஒடுக்கிற்று. அங்கே அணிவகுத்து நின்ற வீண் செருக்கு என்னும் முதலைக்கூட்டம் மயக்குற்று நிலை குலைந்தது—அந்தத் தண் மணத்தால்.

அந்த மாகடலில் இப்போது புயல் இல்லை. கொந்தளிப்பு இல்லை. இனி அந்தக் கடலைத் தாண்டுவது எளிது.

தலைவன் இறுமாந்து நின்றான். விடுதலை கண்ணுக்கெட்டும் தூரத்தில் தெரிந்தது. அதைச் சுட்டிச் சுட்டிக் காட்டித் தலைவன் பெரு மகிழ்ச்சியிலாழ்ந்தான்.

அடிமைகள் விடுதலை பெறப் போகும் செய்தி பகைவர்க்கு எட்டாமலிருக்குமா? அந்தச் சூழ்ச்சியில் வல்ல பகை — பிறரை அடிமைப் படுத்தி அதன் மூலம் வாழ்வுப் பெருக்கம் கண்டிருந்த அந்தக் கூட்டம், தன்னுடைய—ஆண்டான்—நிலையிலிருந்து இழிந்து கொள்ள எளிதில் ஒருப்பட்டுவிடுமா?

சுற்றிலுமிருந்த கடலில் உலவ முடியாமல் வேலை இழந்து நின்ற பேராசைத் திமிங்கிலங்களையும், வீண் செருக்கு என்னும் முதலைக் கூட்டத்தையும் அழைத்து அந்தப் பகைக்கூட்டம். அவற்றோடு கலந்து நெடுநேரம் ஆலோசனை புரிந்தது.

அன்றே, அவ்வேளையே அந்தப் பேராசைத் திமிங்கிலங்களும், வீண் செருக்கு முதலைக் கூட்டமும் மாறு வேடங்கள் புனைந்து கொண்டன. அவை ஒவ்வொன்றும் கையில் ஒரு பட்டியல் வைத்திருந்தன. விடுதலைக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டிருப் போரில் யார், யார் தற்புகழ்ச்சிக்கு அடிமைப்பட்டவர்கள், யார் யார் தாம் சேர்ந்திருக்கும் கூட்டத்தின் மொத்தச் செல்வாக்கவிடத் தம்முடைய தனிப்பட்ட செல்வாக்கில் பெரு விருப்பு உடையவர்கள், யார் யார் இன்று ஒன்றைச் சொல்லி விட்டு, நாளை ஒன்றைச் சொல்லுவதும், இன்று ஒன்றைச் செய்து விட்டு, நாளை அதை மறுப்பதுமான குணத்துக்கு உரிமையாளர்; யார், யார் வெறும் உணர்ச்சி நிலையில் நின்றபடி எதையும் முடிவு கட்டி விடுவோர், யார் யார் நிலையில்லாமல் அலைந்துகொண்டிருக்கும் உள்ளத்தை உடையோர் என்ற விவரங்கள் எல்லாம் வரிசை தப்பாமலிருந்தன அந்தப் பட்டியலில்.

அந்தப் பட்டியலில், குலக்கொடி வளர முதல் முதல் விதை நட்ட போது, கூடஇருந்த ஒருவனின் பெயர் முதலிடம் பெற்றிருந்தது.

அவன் இப்போது அந்த விடுதலைக் கூட்டத்தின் தளபதிகளில் ஒருவனாக இருந்தான்.

வெள்ளையுள்ளம் படைத்த தலைவன் நெடுநாள் அந்த ஒருவனை மட்டும் ஏனோ எவ்வாறோ தன் அருகிலேயே வைத்திருந்தான். பகைவரிடத்திலே அவனைத்தான் பல முறையும் தூது போகச் செய்தான் அந்தத் தலைவன்.

அவனோ எடுத்ததற்கெல்லாம் தன் முனைப்பைக் காட்டி வந்தான்,

தலைவனோ அந்தத் தன் முனைப்பை விடுதலை வேட்கையால் எழுந்த பெரு முனைப்பு என்று கருதி அந்தச் செருக்காளன்மீது மேலும் மேலும் அன்பு பாராட்டினான்.

அந்தத் தலைவனைச் சுற்றிலுமிருந்த வீரர்கள் தலைவனின் பெருந்தன்மை கண்டு வியந்தனர். எதிலும், யாரைப்பற்றியும் நல்லதை மட்டும் எண்ணுகின்ற அந்தப் பண்பாளனின், அந்தப் பேரறிவாளனின் உயர்ந்த குணத்தை எண்ணி எண்ணி இறும்பூதெய்தினர்.

அதே வேளை, தலைவனுடைய பண்பார்ந்த பேரன்பையே தன்னுடைய பெரு வலியாகவும், தலைவனின் பலவீனமாகவும் எண்ணிவிட்ட அந்தச் செருக்காளனின் திமிர்ப் பேச்சு, அவனுடைய தன் முனைப்பு மற்ற வீரர்களை மனநோகச் செய்தது.

அந்தச் செருக்காளனோடு புகழ் விரும்பி ஒருவனும் சேர்ந்து கொண்டான். அவன்—

திடீரென்று உணர்ச்சி வசப்பட்டு ஒன்றைச் செய்வான். மறுநாள் செய்ததை எண்ணி மனம் நோவான்; மூலையிற்போய் ஒதுங்கிக் கொள்வான். நிலைத்த பிடிப்பு எதிலும் இல்லாதவன் அவன். நிலைத்த மனம் இல்லாதவன் அவன். நிலையான பண்பு, நிலையான தன்மை, நிலையான அறிவு, நிலையான ஆற்றல் எதுவுமே அவனிடம் இல்லை — ஒன்றைத் தவிர, புகழ் எனும் ஒன்றை விரும்புவதைத் தவிர.

அன்னார் இருவரையும் மாறு வேடங்களில் பகைவர் ஏவிவிட்ட பேராசைத் திமிங்கிலங்களும், வீண் செருக்கு முதலைக் கூட்டமும் சூழ்ந்து நெருங்கிய தொடர்பை ஏற் படுத்திக் கொண்டுவிட்டன.

ஒரு நாள்,

வீரன் ஒருவன் ஓடிவந்தான் தலைவனிடம் — வியர்க்க, விறுவிறுக்க, மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க.

“தலைவனே நம் குலக்கொடியை ………!''

“குலக்கொடியை……?''

தலைவன் திடுக்குற்று எழுந்து நின்று கேட்டான்.

“ஒருவன் நாலைந்து பேர்களைச் சேர்த்துக்கொண்டு, கொடுவாளும், கையுமாக வந்து……''

"கொடுவாளும் கையுமாக வந்து ......காவல் காத்து நிற்கின்ருனு?"

"இல்லே தலேவனே! அறுப்பதற்கு முனேந்து நிற்கிருன்!"

"ஆ! யாரவன்? அறியாமைக் கோட்டத்திலிருந்து வந்தவனு? ஆணவக் கோட்டத்திலிருந்து வந்தவனு?"

"இல்லே. அவன் இதுவரை நம் மோடிருந்தவன் தலேவனே! ஒன்ருக இருந்து, நட்பாக இருந்து, நல்ல பெயர் பெற்று, நம்மை அழிக்கத் திட்டமிட்டிருக்கிருன் பாவி! சூழ்ச்சிக்காரன்! வஞ்சகன்...!"

"போதும், போதும். யாரையும் இகழ்ந்துபேசாதே! யாரவன்? பெயர் என்ன?"

"அவன்தான் கூடியிருந்தே கழுத்தறுப்பவன். உங்கள் பெரிய தளபதி!"

"விளேயாடாதே! இது பயங்கர விளேயாட்டு!"

"இல்லே தலேவனே, உண்மையைத்தான் சொல்கிறேன்!"

தலேவன் பேசவில்லே. சற்று நேரம் அவனல் பேச முடியவில்லே!

யாரிடத்திலும் உள்ள நல்ல குணத்தைப்பற்றி மட்டும் எண்ணுகின்ற அந்தத் தலேவனல் அந்தச் செய்தியை நம்பமுடியவில்லே.

சிறுபொழுது கழிந்தது. தலேவன் பேசினுன்:

"எப்படியோ அந்தத் திமிங்கலங்களின் தொடர்பும், முதலேக் கூட்டத்தின் நேசமும் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டன. அதனல்தான் அவர்கள் ஆற்றுவது என்ன வென்று தெரியாமலே, எதையோ புரிய எண்ணி, ஏதோ ஒரு குழப்பத்தில் இப்படி நம் குலக்கொடியை அறுப்பதற்கே கச்சை கட்டிக்கொண்டு நிற்க முனேந்துள்ளார்கள். அவர்களின் அறியாமையைப் போக்குவது நம் கடமை. அவர்களின் தீய செயலுக்காக இரங்குவோம். பொறுப்போம் பிழைகளே! மறுபடியும் நம்முடனே சேர்த்துக் கொள்வோம்!"

"இல்லே தலேவனே! அவர்கள் நம்மை விரும்புவதைவிட, அந்த ஆணவக் கோட்டாத்தாரைத்தான் அதிகம் நேசிக்கின்ருர்கள். அந்த ஆணவக்கோட்டத்தில் தன்னிச்சையாக அவர்கள் உலவ நினேக்கிருர்கள். அதில் பெருவேட்கை அவர்களுக்கு. அந்தக் குருட்டு வேட்கை பகைவனின் அன்பைப்பெறவேண்டுமென்ற நோக்கத்தை ஏற்படுத்திவிட்டது. அந்த நோக்கம் நிறைவெய்த அவர்கள் எதை வேண்டுமானுலும் புரிவார்கள். எப்படி வேண்டுமானுலும் தங்களே மாற்றிக் கொள்வார்கள்..."

ஓடிவந்த வீரன் கூறிக்கொண்டு நின்றபோது, பிறிதொரு வீரன் அங்கு வந்தான்.

"தலேவனே, நம் குலக்கொடியை அறுத்துவிட்டுத்தான் அப்பால் நகர்வேன் என்று அந்த உன்மத்தன் கொடுவாள் தூக்கிக்கொண்டு நிற்கிருன். கொடுவாளே ஓங்கிவிட்டான். இந்நேரம் வெட்டு நம் குலக்கொடி மீது பட்டிருந்தாலும் பட்டிருக்கும். அவன் பக்கம், பத்துப் பதினேந்து பேர் சேர்ந்துகொண்டு நிற்கிருர்கள். எங்கும் ஒரே அமர்க்களம். அந்தக் கூடிக்குடி கெடுப்பார் நம்மீது வசை மாரி பொழிந்துகொண்டு நிற்கிருர்கள். எதை எதையோ குற்றச்சாட்டுகளாக எடுத்து எம்மீது எறிந்து கொண்டு நிற்கிருர்கள்."

"பாவம், யாரே ஆசைக்கு அடிமையாகாதார் — ஆற்ருமையால் ஏற்பட்ட பொருமையே எதைவேண்டுமானுலும் செய்யத் தூண்டுமே! பெருமையையும், புகழையும் பெரியனவாக எண்ணிக்கொண்டுவிட்டவர்களின் நிலே அதைவிடக் கேவலமானதாயிற்றே! சரி, சரி, இனி அவர்கள் தாமாகவே திருந்த வேண்டும். அதுவரை அவர்கள் எதை வேண்டுமானுலும் செய்து கொண்டு போகட்டும்......"

அவ்வேளே மற்றுமொருவன் ஓடி வந்தான்.

"தலேவனே, தலேவனே!"—வார்த்தையிற் படபடப்பைக் காட்டினுன் அவன்.

"நம் குலக்கொடிமீது அந்த மாபாதகனின் கொடுவாள் வீழ்ந்துவிட்டது. உடனிருப்போரும் குலக்கொடியைச் சாடத்தொடங்கிவிட்டனர்"

தலேவன் திடும் என எழுந்தான். விரைந்து நடந்தான்.

குலக்கொடியை அறுக்கவந்த—கொடுவாள் தூக்கிளாக வருணிக்கப்பட்டாரின் அருகில் வந்து நின்ருன். அங்கே குலக்கொடி என்றும் போல் எழில்காட்டி, பசுமைகாட்டி, வாடுதல் இன்றி, ஆடுதல் இன்றி நீண்டு நிலேத்துக்கிடந்தது.

நேற்றுவரை, 'நாட்டுக்குத் தொண்டனுக இருப்பதையே நான் விரும்புகிறேன். என் கடன் பணி செய்துகிடப்பதே' என்று மாற்ருர் மனம் புழுங்கி ஆற்ருமையோடு நிற்குமாறு பேசியவன், இன்று தானே ஆற்ருமைக்கு இரையாகி, 'என்னேவிட வேறு தலேவன் எவனும் இல்லே. நானே பெருந்தலேவன். நான் வைப்பதே சட்டம்!' என்று பேசமுனேந்ததோடு, இந்த உண்மைத் தலேவனே, இருளகற்ற வந்த ஒளிவிளக்கை, இழித்தும், பழித்தும் பேசத் துணிந்த—அந்தப் பேராசையின் பேராட்சிக்கு அடிமையாகி விட்டவனே, ஒருகணம் ஏறிட்டு நோக்

## ஊறு தேடிக்கொள்ளக்கூடாது

"........இலங்கை அரசாங்கம் தனது பிடிவாதத்தைத் தளர்த்திவிட்டு, சிங்கள மொழியோடு, தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டாலொழிய, இலங்கையில் ஏற்பட்டுள்ள குழப்பங்களேத் தணிக்கமுடியாது. அப்படிச் செய்வதுதான் கண்ணியமும்கூட. இலங்கை அரசு, உலகத்திலேயே முதன் முதலாக ஒரு பெண்மணியைப் பிரதமராகப் பெற்றதை உலகெங்கும் பாராட்டுகையில், இந்தப் பாரபட்சத்தின்மூலம், அதற்கு ஊறு தேடிக்கொள்ளக் கூடாது. இல்லாவிடில், இப்பொழுது நடைபெற்றுவரும் கிளர்ச்சி, வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும் என்பதோடு, ஐக்கியப்பட்டுள்ள இலங்கை, இன அடிப்படையில் பிளவு பட்டுவிடும் என்பதை எச்சரிக்கிருேம்."

—மனிதகுலம்.

கினுன் தலைவன். தன்னையறியாமல் அந்தக் கொடியறுக்க வந்தவன்மீது கழிவிரக்கம் ஏற்பட்டது தலைவனுக்கு.

குலக்கொடியை அறுத்துவிட்டுத் தான் மறுவேலை என்று பேசிய அவர்கள் கையில் படையாகப் பிடித்திருந்தவற்றை நோக்கினுன் தலைவன். உடன் சென்ற மற்றவர்களும் நெருங்கிப்பார்த்தனர். தலைவனைத் தவிர மற்றெல்லாரும் 'கொல்' என்று சிரித்துவிட்டார்கள்.

"பார்த்தீர்களா! அவர்கள் கொடுவாள் தூக்கிக்கொண்டு நம் குலக் கொடியை அறுப்பதற்கே வந்துவிட்டார்கள் என்று சொன்னீர்கள். தொலைவில் நின்று பார்த்துவிட்டு வந்து அப்படிச் சொல்லிவிட்டீர்கள், இல்லையா!—என்றும் சொல்வதையே இன்றும் சொல்கிறேன், எதிலும் பதட்டம் கூடாது.

"பாருங்கள்! அவர்கள் கையில் பிடித்திருப்பது வெறும் வாழை மட்டை!வாழைமட்டையிலும், பச்சை மட்டைகூட அல்ல. நன்ருகக் காய்ந்துபோன சருகு. தொலைவில் நின்று பார்த்தால் கொடுவாள்போல் தோன்றுமாறு அந்தக் காய்ந்த சருகைஅவர்கள் பிடித்துக்கொண்டு நிற்கிருர்கள். அந்தக் காய்ந்த மட்டையா நம் குலக்கொடியை அறுத்துவிடும். பகைவனின் ஆயிரமாயிரம் கொடுவாள் வீச்சுக்கும், கோடரி வெட்டுக்கும் மசிந்து கொடுக்காத, சற்றும் அதிர்ந்துகூட அறியாத நம் குலக்கொடி, இந்த வாழைமட்டை வீச்சிலா வெட்டுண்டு வீழப்போகிறது! பாவம், அவர்கள் அறியாமைக்காக நாம் இரங்கவேண்டும். வாழைமட்டை எதற்குப் பயன்படும் தெரியுமா? பொடி வைத்து விற்கப் பயன்படும்—மூக்குப்பொடி.

வீரர்கள் திரும்பவும் கொல் என்று சிரித்தார்கள்.

"சிரிக்காதீர்கள்! இது சிரிக்க வேண்டிய கட்டமல்ல. வேதனைப் படவேண்டிய கட்டம். சிந்திக்க வேண்டிய கட்டம். இதுவரை வாள் தூக்கி நின்றவர்கள் கையில் வாழைமட்டை வந்தேறிக்கொண்டமைக்கு வருந்தவேண்டியகட்டம்.''

"எப்படியோ ஆணவ, அறியாமைக் கோட்டத்தை அழித்து ஒழித்து, அடிமைநிலை போக்கி, விடுதலை பெறுதற்கான காலம் இன்னும் சற்று நீடித்துக்கொண்டு போய் விட்டது!—அவ்வளவுதான்!" ●

# தண்டனை!

—[இரா. சண்முகம், பி.ஏ.,]—

வட்டிக்கடை மாசிலாமணியின் ஒரே புதல்வி மலர்க்கொடி; தாயற்றவள். செல்வமாக வளர்க்கப்பட்டாள். மாசிலாமணியிடம் காலமெல்லாம் உழைத்த கணக்கப் பிள்ளை சிங்காரத்தின் ஒரே புதல்வன் சுந்தரம். சிங்காரம் தன் மகனைத் தன் முதலாளியிடம் ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடிவிட்டார். சுந்தரம் படித்தவன்; பண்புள்ளவன். முதலாளியிடம் மட்டுமல்ல, அவருடைய மகளிடம்கூட மிக்க அடக்கமாக நடந்துகொள்பவன்.

கணக்கு எழுதிக்கொண்டிருந்தான் சுந்தரம். மலர்க்கொடி சோபாவில் அமர்ந்து வெளிநாட்டு மாத வெளியீடு ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தவள், "மிஸ்டர் சுந்தரம், இங்கு கொஞ்சம் வருகின்றீர்களா?" என்ருள். அவன் கவனமெல்லாம் கணக்கிலேயே பதிந்திருந்தது.

"என்னங்க, உங்களைத்தான்."

அசையவில்லை. எழுந்து சென்று' "உங்களை எத்தனை முறை கூப்பிடுவது?" என்று நயமாகக் கேட்டாள். திகைப்போடு பார்த்தான். "என்னய்யா கணக்கப்பிள்ளை. கணக்கப் பிள்ளை" என்று அதே வாயால் பல முறை சொல்லக்கேட்டுப் பழக்கப் பட்ட அவனுக்கு, திகைப்பு ஏற்படாமலா இருக்கும்?

"என்னங்க?"

"இங்கே வாருங்கள்" என்று அழைத்துக்கொண்டு சோபாவில் சென்றமர்ந்தாள்.

"இப்படி உட்காருங்கள்" என்று தன் பக்கத்தில் இடம் காட்டினுள். கையைக் கட்டிக்கொண்டு நின்ருன். "என்னங்க, ஏதாவது அவசரச் செய்தியா?"

"என்னங்க அல்ல என் பெயர்... மலர்க்கொடி. உம்,இப்படி உட்காருங்களேன்." என்று அவனைப் பார்த்தாள். அந்த அசடு தன் கண்களைக் கீழே போட்டுக்கொண்டு, "எங்கேயாவது போய் வரவேண்டுமா?" என்ருன்.

புரியாத அவனுக்கு புரியவைக்கக் கையைப் பிடித்து இழுத்துச் சோபாவில் அமரச்செய்தாள். தேள் கொட்டியதைப்போல வெடுக்கென்று எழுந்துவிட்டான். "இதெல்லாம் வேண்டாங்க. நீங்க பெரிய இடத்துப் பெண்; நல்ல இடத்துக்குப் போறவங்க."-ஏழை பேசினுன்.

"மனம் விட்டுப் பேசுகிறேன்; என் அப்பாவின் இலட்சக்கணக்கான சொத்துக்கு ஒரேவாரிசு நான். இதைவிடப் பெரிய இடத்தில் நான் நிம்மதியாக வாழமுடியாது. செல்வத்திலேயே புரள்பவள். இனி எனக்கு நல்ல மாப்பிள்ளைதான் தேவை. இங்கேயே இருப்பவர்தான் வேண்டும். அதற்கு நீங்கள் ஏற்றவர்" கன்னியின் உள்ளம் பேசியது.

"அம்மா, தங்கள் அந்தஸ்துக்கு இது ஏற்றதல்ல. அப்பாவிடம் தெரிவித்து நல்ல மாப்பிள்ளை பார்க்கச் செல்கிறேன்." அப்பாவி உளறிக் கொட்டினுன்.

"தேடாத சுகம் தேடி வருகிறது."

"வீண் ஆசைக்கு என் மனம் இடம் கொடுப்பதில்லை."

"என் ஆசை...." என்று எழுந்து அவன் கைகளைப் பற்றிஇழுத்து அவனை அமரச் செய்தாள். எழுந்து நடையைக் கட்ட ஆரம்பித்தான். சீறும் புலியானுள் மலர்க்கொடி; கன்னத்தில் ஓங்கி அறை விட்டாள். மறு கன்னத்தில் தன் கையைக் காட்டினுன்.

"சீ, இயேசு புத்தியோ? வள்ளுவர் பண்பைக் காணுேமே' வலிக்கின்ற கையை நீவக்கூடத் தெரியவில்லை!"

(12-ம் பக்கம் பார்க்க)

# ஒரே வழி!

—[சா. சதாசிவம்]—

"சார்...நீங்கள்தானே செந்தில்?"

"ஆமாம்; அமருங்கள். என்ன வேண்டும்?"

"ஒன்றுமில்லை...உங்களை அழைத்துச்செல்ல வந்தேன்"

"ஏன்? ஏதாவது கலைநிகழ்ச்சியா?"

"இல்லை! சுந்தரவதனம் தெரியுமல்லவா?"

"தெரியும்..."

"அங்குதான் வரவேண்டும், 'ஐயா உங்களைப் பார்க்கவேண்டுமாம"

"சரி......வருகிறேன்......" சுந்தர பவனத்தை நோக்கிச் சென்றேன்.

*

கூடத்தில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார் அவர், என்னைக் கண்டதும் புன்முறுவலுடன் வரவேற்ருர்,

"உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்; மாடிக்குப் போவோமா?"

மாடியில் பேசவேண்டிய செய்தி என்ன? ஒருவேளை 'அது' தெரிந்திருக்குமோ? அகத்தில் அச்சந்தான்! ஆனுலும், அவரைப் பின்தொடர்ந்தேன்,

"செந்தில்! எனக்கு எல்லாம் தெரியும்" பீடிகையுடன் பேச்சைத் தொடங்கினர்.

"செண்பகம் எனக்கு ஒரே மகள். செல்வச் செழிப்பிலே வளர்ந்தவள், அவள் மனங்கோணமல் வாழவேண்டும் அதுதான் என் ஆசை. உங்களுக்கு நிலம் செல்வம் எவ்வளவு சேரும்?"

"நிலம் நாலுவேலிதான், செல்வம் கல்விதான். மற்றப்படி கிராமத்திலொரு வீடும் இருக்கிறது!"

"உம்...உங்கள் சாதி...?"

"என்ன சார்...உங்களைப்போன்ற தேசியவாதிகள், அதுவும் இந்தக் காலத்தில் சாதியைக் கேட்கலாமா?"

"சட்டப்! எனக்குத்தெரியும் உன்னைப்பற்றி! அந்தஸ்திலே தாழ்ந்தவன்! என் மகளுக்கு ஒரு சேலை வாங்கித்தர வக்கில்லாதவன்! காதலாம் காதல்...!" —உரக்கச் சிரித்தார் அவர்.

"ஐயா! காதலின் பொருள் தெரியாமல் சிரிக்கிறீர்கள்! பட்டுச்சேலையிலும், பளிங்குக் கட்டிடத்திலும் ஒட்டிக்கொண்டிருப்பதல்ல காதல்? பருவ நெஞ்சங்களிலே பூத்துக்குலுக்கும் எழில் முல்லை!"

"அதெல்லாம் வாழ்க்கைக்கு உதவாது தம்பி! எனக்குச் சமமானவன் தான், எனக்கு மருமகனக வரமுடியும்! எப்படியோ என் மகளை மயக்கிவிட்டாய்!"

"இல்லை; மனங்கலந்தோம் என்று சொல்லுங்கள்!"

"அதைப் பிரிக்கத்தான் உன்னை அழைத்துவந்தேன்! செண்பகம் எழுதிய கடிதங்களைக் கொடுத்துவிடும்படியும், அவளை மறந்துவிடும்படி எச்சரிக்கவுந்தான் உன்னை மாடிககுஅழைத்து வந்தேன். உயிரின்மேல் ஆசையிருந்தால், இந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிவிடு!" அலட்சியமாக நூறு ரூபாய் நோட்டுகளைத் திணித்தார்!

சிறிது நேரச் சிந்தனைக்குப் பின் அவர் ஆணையை ஏற்றுக்கொண்டு புறப்பட்டேன்.

*

அறைக் கதவைத்திறந்து படுக்கையில் விழுந்தேன். "சே! என்ன உலகம்! இலக்கியக் காதல்பற்றி இன்னுரை வழுங்குகிருர்கள். ஆனுல், இணைந்த இதயங்களை—அதில் மணக்கின்ற காதல் நினைவுகளைச் சிதைப்பதற்குத் துடிக்கிறது—சீர் கெட்ட சமுதாயம்! சிந்தனையற்ற மனிதக் கூட்டம்! என்றுதான் திருந்துமோ?"—நினைவுகள் சுழலப் படுத்திருந்தேன்,

"டக்...டக்..." அறைக் கதவைத் தட்டுவது யார்? திறநதேன்; திடுக்கிட்டேன்! ஆம்! செண்பகம் நின்றுகொண்டிருந்தாள்! அனற்பிழம்பான விழிகளிலே அணையாத கோபம்; பவள இதழ்களிலே படபடப்பு—அதிலிருந்து வெடித்துச் சிதறின, வேதனைச் சொற்கள்!

"பணமென்றதும் பாவையெனை மறந்துவிட்டீர்! பண்புதனை இழந்துவிட்டீர்! நம்பினேன்! நஞ்சாக மாறிவிட்டீர்! நெஞ்சென்ன இரும்பா? நேசமெலாம் மறந்தீரா? துரோக புரிப் பயணந்தான் தொடர்ந்தீரா?"

"செண்பகம்! என்ன பேசுகிருய்?",

"புரியவில்லையா என் புலம்பல்! புதுப் பணக்காரன் என்ற திரைதான் கருத்தை இருட்டறையாக்கிவிட்டதா? உம்...இனி என்ன...நானில்லாவிட்டால் இன்னெருத்தி!"

"போதும் நிறுத்து!"

"அதட்டினல் அடங்கிவிட, நானென்றும் ஆமையல்ல; ஊமையல்ல!"

"செண்பகம்! சொல்லை வேலாக்கித் துளைக்காதே!"

"வேல்! அதைத்தான் என் உள்ளத்தில் பாய்ச்சிவிட்டீர்களே!"

"பாய்ச்சவுமில்லை; படுபாதகம் புரியவுமில்லை! கொண்ட காதலை மறந்த கபோதியல்ல நான்."

"என் தந்தையுடன் நீங்கள் சொன்னது?"

மறுக்கவில்லை; ஆனால் ஏனென்று எண்ணிப் பார்த்தாயா? உன்னைத் தான் மணப்பேன் என்று சொல்லியிருந்தால், நான் திரும்பி வந்திருக்க முடியுமா? உன் திருமுகத்தைக் காணத்தான் முடியுமா? அங்கேயே கல்லறையைக் கட்டியிருப்பாரே! முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும்!"

"என்னை மன்னித்துவிடுங்கள்...... மனம் புண்படப் பேசிவிட்டேன்!"—மலர் விழிகளில் நீர் வழிய நின்றாள்; விம்மினாள்!"

"ஏமாற்றம் ஏற்படும்போது, ஆத்திரம் ஏற்படத்தான் செய்யும்! இதற்கெல்லாம் அழுவதா" எங்கே...சிரி... உம், சிரிக்கமாட்டாயா?"

கோபம் கொப்பளித்த முகத்தில் மகிழ்ச்சி நிலவியது.

நீண்ட எண்ணப் போராட்டத்திற்குப் பின், என் திட்டத்தை ஏற்றுக்கொண்டாள்! பூரிப்புடன் பிரிந்து சென்றாள்!

சாதிப் பூசலும்; சனாதனங்களும் சமுதாயத்தில் உலவும் வரை, எங்களைப் போன்ற எண்ணற்ற காதலர்களுக்கு இந்தச் சமுதாயங் காட்டும் ஒரே வழி? ஆம்; அந்த வழியைத் தவிர வேறு வழி இல்லைதான்!

• * •

புழுதி பறக்கவந்த பிளைமவுத்கார் சுந்தரபவனத்தில் நின்றது. அதிலிருந்து இறங்கிய பெரிய மனிதரை—உருவத்தில்தான்—வரவேற்றார். பெண்பார்க்க வந்தவரின் கண்ணோட்டத்தை உணர்ந்தவராய், மகளை அழைத்துவரச் சென்றார்; குரல் கொடுத்தார்!

அந்தக்குரல்......எதிர்கால இன்ப நினைவுகளைச் சுமந்தவண்ணம், செந்திலுடன் இரயிலில் செல்லும் செண்பகத்தின் செவிகளிலா ஒலிக்கப்போகிறது!

10-ம் பக்கத் தொடர்ச்சி

மாசிலாமணி வேகமாகக் கூடத்தில் நுழைந்தார். மலர்க்கொடி சுந்தரத்தை அறைவிடும்பொழுதே 'காம்பவண்'டிற்குள் நுழைந்துவிட்டார் போலும்! அப்பாவைக் கண்டதும் மலர்க்கொடி கண்களைப் பொத்திக்கொண்டு உள்ளே ஓடிவிட்டாள். மாசிலாமணி தன் குடையாலேயே சுந்தரத்தின் மண்டையில் தாக்கு தாக்கென்று தாக்கினார். அடிக்கின்ற சத்தம் கேட்டு ஓடிவந்த மலர்க்கொடி, "அப்பா, அப்பா, வேண்டாம், வேண்டாம், வேண்டாம்" என்று தடுத்துப் பார்த்தாள். "நன்றி கெட்ட நாய். உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கிறவனைச் சும்மாவிடக்கூடாதம்மா. நீ உள்ளே போ." குடைக் கம்பிகள் பட்டு இரத்தம் பீறிட்டுக் கீழே சாய்கின்றவரை அடியை நிறுத்தவில்லை.

டெலிபோன் மணி அடித்துக் கொண்டிருந்தது. முறிந்த குடையை வீசி எறிந்துவிட்டு டெலிபோனை எடுத்தார்.

"நான்தான் மாசிலாமணி. நீங்கள் யார்...?

என்ன கமிஷனரா? இங்கே வருவாரா? என்னைப் பார்க்கவா?" பயத்தோடு போனை வைத்தார்.

"அம்மா, போலீஸ்கமிஷனர் இங்கு வருகிறாராம். அதற்குள் இங்கு நடந்ததை யாராவதுபோலீசுக்குப் போன் செய்திருப்பார்களா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை அப்பா. மாலா வீட்டிற்குக்கூட கமிஷனர் வந்ததாக அவளே நேற்றுக் கிளப்பிலே சொன்னாளப்பா. ஏதோ போலீசு உதவி நிதி சேர்க்கிறார்களாம். வசூலுக்கு வருவாங்க."

"அப்ப, நானே நேரில் போய்க் கொடுப்பதைக் கொடுத்து வந்துவிடுகிறேன்... டாக்டரை அழைத்து இவனைக் கவனியம்மா. இப்ப அவனை வெளியில் விடக்கூடாது" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். மலர்க்கொடி போனில் டாக்டரை அழைத்தாள்.

கட்டிலில் படுக்கவைத்து கட்டுப் போட்டு,ஊசி ஒன்றும் போட்டுவிட்டு "அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் கண்விழிப்பார். பயப்படவேண்டாம்" என்று சொல்லிவிட்டு டாக்டர் நகர்ந்தார்.

தேம்பித் தேம்பி அழுதாள். படுக்கையருகே அமர்ந்து அவன் கைகளை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்துக்கொண்டாள். கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

அப்பா உள்ளே நுழைந்தார்: திகைத்தார். "அப்பா, என்மீதுதான் குற்றம். என்னை மன்னித்து விடுங்கப்பா. நான்தான் என்னை மணந்து கொள்ளும்படி அவரைக் கேட்டேன். எனக்கு அறிவுரை கூறி மறுத்துவிட்டார். ஆத்திரம் கொண்ட நான் அறைவிட்டேன். அதோடு நீங்களும் மயக்கம்போட்டு விழும்படி அடித்துவிட்டீர்கள். இவர் மிகவும் பண்புள்ளவர். இவரையே திருமணம் செய்து கொண்டு, வீட்டோடு இருக்கிறேன். அனுமதியுங்கள் அப்பா" என்று அப்பாவின் காலைப் பிடித்தாள்.

"ஐ......யோ அம்மா... அம்மா" என்ற முனகல் ஒலிகேட்டு மலர்க்கொடியும் அவள் தந்தையும் சுந்தரத்தின் பக்கம் திரும்பினர். அவன் திருதிருவென்று விழித்துக்கொண்டிருந்தான். முதலாளியைப் பார்த்ததும் எழுந்திருக்க முயற்சித்தான். மலர்க்கொடி கட்டிலில் அமர்ந்து அவனைத் தன் கையில் தாங்கிக் கொண்டு, தண்ணீர் கொடுத்தாள். மிரட்சியுடன் பார்ப்பதைக் கண்ட மாசிலாமணி, "தம்பி, பயப்பட வேண்டாம். விவரம் தெரியாமல் உன்னை அடித்துவிட்டேன்; மனதில் போட்டுக்கொள்ள வேண்டாம். இனி, நீ, இந்த வீட்டு மாப்பிள்ளை. குணமானதும் உங்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்," என்று மள மளவென்று பேசினார். மலர்க்கொடியின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவன் நெற்றியில் பட, அவனை ஏறிட்டுப் பார்த்தான். மலர்க்கொடி தன் விழிகளை வேறு பக்கம் திருப்பினாள். அவன் முகத்தில் புன்னகை தவழ்வதைக் கண்ட மாசிலாமணி அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

★

# தீயும் தென்றலும்

**டி.கே.சீனிவாசன்**

**சா**கிற நேரத்தில் நீண்ட நேரம் தன் மகளுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டே இருந்தாள் பத்மாவின் தாய். துளிர்த்த நீர்த்துளிகளை வெளியே அனுப்புகிற சக்தியை அவளுடைய விழிகள் இழந்துவிட்டதால், ஓரிரண்டு அவளுடைய இமையோரத்தில் ஒண்டிக் கொண்டிருந்தன. ஏதோ சொல்ல வேண்டும் என நினைக்கிருள் என்பதுமட்டும் பத்மாவுக்குப் புரிந்தது. எப்படி அதைத் தெரிந்துகொள்வது? இறுதியில் அவள் தாய் பேசினுள். நீண்ட இடைவேளைவிட்டு ஒவ்வொரு சொல்லாக வெளிப்பட்டது.

“அம்மா! எனக்குப் பிறந்தவள் நீ என்பதை எப்போதும் மறந்து விடாதே!’’

அவ்வளவுதான் மிச்சம் இருந்தது போல அவளுடைய மூச்சு அடங்கி விட்டது.

வழக்கமான அலறல், கதறல் எல்லாம் எப்போதுமே நடப்பதைப் போல நடந்தன. பத்மா மட்டும் அழவில்லை. அவளோடிருந்த நாலைந்து நாட்களும் தன் தாய் எவ்வளவு வேதனை அனுபவித்தாள் என்பதைத் தெரிந்து வைத்திருந்தாள். இருந்து துடிப்பதைவிட இல்லாமல் போனதுதான் நல்லது என்ற எண்ணந்தான் அவளுக்கு ஏற்பட்டது.

எப்போதும் தூங்கப் போகும் போது இந்தக்காட்சியைத் தன் கண் முன்னுல் கொண்டு வருவாள் பத்மா. அதில் ஆழ்ந்திருக்கும் நிலையிலேயே உள்ளம் அமைதி காணும்; உடல் அயர்ந்து போகும்.

அன்று அதே நிலைதான் ஏற்பட்டது அவளுக்கு. நெஞ்சில் ஒருவித **நிம்மதி நிறைந்தது.**

எழுந்து கதவைத் திறந்தாள். அவளுடைய அப்பா தணிகாசலம் பிள்ளை நின்றுகொண்டிருந்தார்.

“என்னம்மா விஷயம்?’’ என்று பரிவோடு கேட்டார்.

“ஒன்றுமில்லை அப்பா. காலையில் சொல்லுகிறேன்’’ என்று சொன்னுள் பத்மா.

“சொன்னுல்தானே அம்மா தெரியும்’’ என்று சொல்லிக்கொண்டே சென்ருர் அவர்.

இரவு முழுதும் பத்மாவுக்கு உறக்கம் வரவில்லை. அடிவாங்கிய இளைஞுன்மேல் உருவான அனுதாபம் விமலாவின்மேல் ஆத்திரமாக மாறிற்று. விடிந்ததும் அவளைச் சந்தித்து......என்ன கேட்பது, எப்படிப் பேசுவது என்பதெல்லாம் அவளுக்கு விளங்கவில்லை. ஒவ்வொரு கேள்வியாக உருவாக்கி அதை வாக்கியமாக்குவதிலேயே ஈடுபட்டிருந்த பத்மா களைத்துப்போய்த் தூங்கிவிட்டாள்.

தன் மகள் தன்னைத் தனியே ஒதுக்கிவிட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டது கண்டு, மனவேதனை அடைந்தார் தணிகாசலம் பிள்ளை. என்ன ஆயிற்று என்று அவரிடமேற்பட்ட சந்தேகம், என்னென்ன ஆகிவிட்டதோ இன்று இரவு முழுதும் சொல்லியிருந்தால் இந்த வேதனை ஏற்பட்டிருக்காது. பசித்தவன் முன் இலையைப் போட்டு விட்டு எதையுமே பரிமாருமல் போய் விட்டால்......துடித்தது அவர் உள்ளம். உறக்கம் அவரை ஒட்டாமலே ஒதுங்கி நின்றது. என்னென்ன நடந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்தார்; எப்படி எப்படி நடந்திருக்கும் என்று உருவகப்படுத்த முயன்ருர். உலர்ந்த சருகைப்போல எரிந்து கருகிக்கொண்டிருந்தது அவர் இதயம்.

இறந்துபோன தன் மனைவியைப் பற்றி நினைத்துக்கொண்டார். மனத்துடிப்புகளைத் தனக்குள்ளேயே மறைத்துக்கொண்டு, மகிழ்ச்சியை மட்டுமே மற்றவர்களுக்கு அளித்துப் பழக்கப்பட்ட அந்தப் பேதை...! இன்னல்கள் அடுத்தவரைப் பாதிக்காமல் இடிதாங்கியைப்போல் தன்னிடம் இழுத்துக்கொண்டாள். அவள் போன பிறகு......எதையும் ஆட்டிப் படைத்த இவரே எல்லோருடைய அனுதாபத்துக்கும் உரியவரானுர். அந்த அச்சில் உருவானவள்தானே இந்தப் பெண். தன்னைப் போலவே தன், பெண்ணையும் தயார் செய்துவிட்டுப் போயிருக்கிருளே தன் மனைவி என்ற எண்ணம் உண்டானது அவருக்கு. இதற்காக அவளை வாழ்த்துவதா, அல்லது பாசத்தால் தன் நிலை பரிதாபத்துக்குள்ளானதை நினைத்து வருந்துவதா என்பது அவருக்குப் புரியவில்லை.

இவரைப்பற்றிய கவலையே இல்லாமல் கழிந்து கொண்டிருந்தது இரவு. காலத்தின் காவலனுக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற கடிகாரம் மணிக்கொரு முறை குரல் கொடுத்துத் தன் கடமையிலிருந்து தவறவில்லை என்பதைக் காட்டிக்கொண்டது. கலைந்துகொண்டிருந்த இருள் இவருடைய கவலையைப் போக்கவில்லை. முளைத்த வெள்ளியாலும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை. உதித்த கதிரவன்தான் இந்நேரம் பத்மா எழுந்திருப்பாள் என்று கவனப்படுத்தினுன். எழுந்துசென்று தாளிடப்பட்டிருந்த தன் மகளுடைய அறைக் கதவைத் தட்டினுர்.

வெள்ளி முளைப்பதற்கு முன்பே விழித்தெழுந்து பழக்கப்பட்ட பத்மா அன்று வெகுநேரம் படுக்கையிலேயே கிடந்தாள். கதவு தட்டப்பட்டதால் எழுந்து திறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது அவளுக்கு. உதித்த கதிரவன் பழுத்துக் கொதிப்பேறுகிற நிலைக்கு வந்துவிட்டான், ஒளியைத் தாங்க முடியாமல் விழிகள் கூசின. உள்ளே மண்ணில் புதைந்திருந்தாலும்; ஓடிக்கொண்டிருக்கிற நீரால் உருமாறிப் போகும் கல்லைப்போல, உள்ளம் ஓடியாடிக் கொண்டிருந்ததால் ஓய்ந்துகிடந்த உடலில் ஒருவித அலுப்பு உருவாகியிருந்தது. அவளுடைய உடல், "எனக்கு வேலை தராதே" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டது.

தாளைத் திறந்தவுடன் தன் தந்தை எதிரே நிற்பதைக் கண்டாள். சிவந்திருந்த அவருடைய விழிகளைக் கண்டதும் அழுகை வந்தது அவளுக்கு. இரவெல்லாம் அவர்......தேம்பத் தொடங்கியது பத்மாவின் உள்ளம். தள்ளாத அந்த வயதில் அவருக்குத் தன்னால் ஏற்பட்ட கவலை......

"என்னம்மா உடம்புக்கு?" என்று கேட்டுக்கொண்டே அவளுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தார் அவர்.

எதுவுமே ஏற்பட்டதில்லை அவளுக்கு அதுவரையில்; அதனால்தான் எதிர்பாராது உருவான முதல் நாளிரவு நிகழ்ச்சி அதிர்ச்சியை உண்டாக்கிவிட்டது.

"ஒன்றுமில்லையப்பா" என்று சொன்னாளே தவிர, அவளே அதை நம்பவில்லை.

"நேற்றிரவு என்னம்மா நடந்தது?"

கனிவுங் கவலையும் நிறைந்திருந்த அவருடைய கேள்வி பத்மாவைக் கலங்கச் செய்துவிட்டது. தன்னுடைய உடலைத்தான் அவளுடைய தாய் எடுத்துக்கொண்டாளே தவிர. உள்ளத்தைத் தன் கணவனிடம் ஒப்படைத்துவிட்டுப் போயிருந்தாள். அதில் ஊறி வரும் அன்புணர்ச்சிகளையெல்லாம் அள்ளிக்கொட்ட அவருக்கு இருந்தது இவள் ஒருத்திதானே. அதில் நீந்தித் திளைத்தாள் பத்மா. குளிர்ச்சியே உருவான மலையுச்சியில் வைத்துப் பயிரிடப்பட்ட மலர்ச் செடியைப்போல வாழ்ந்து வந்தாள் அவள்.

உண்மையை அவரிடம் சொன்னால்......? உடலில் ஏற்பட்ட தளர்ச்சி உள்ளத்திலும் தொத்திக்கொள்ளும். சருகான பிறகு மென் காற்றே போதுமே அதைத் துண்டித்து வீழ்த்த!

"யாரோ என் பின்னால் வந்தது போலிருந்தது," என்றாள் அவள்.

"துணைக்குத்தான் நான் வருகிறேன் என்றேனே, நீ ஏனம்மா தனியாகப் போகிறேன் என்று பிடிவாதம் செய்தாய்?"

"எல்லோரும் தனியாக வரும்போது, நான் மட்டும் துணையோடு போனால் என் தோழிகள் ஏளனம் செய்கிறார்கள், அப்பா"

"அவ்வளவு நேரமா ஆனது விழா முடிய?"

"இல்லை அப்பா. விழா முன்னமே முடிந்துவிட்டது. அப்படியே அந்த இடத்தை அலங்கோலமாகப் போட்டுவிட்டு அத்தனை மாணவிகளும் ஓடிவிட்டனர். பாவம்...... வயதான இரு ஆசிரியைகள்...... தனியே அவர்களால் எப்படியப்பா மேசை நாற்காலிகளை எடுத்துப் போட முடியும்? அதனால்தான் நான் இருந்து உதவி செய்யவேண்டியதாகிவிட்டது."

அந்தச் சொற்கள், அவருடைய மகளை மறக்கச் செய்துவிட்டு மனைவியை நினைவுபடுத்தின. அவளிருந்த போது வாழ்ந்த வாழ்வு; இப்போதேற்பட்ட தாழ்வு—இரு பக்கங்களையும் பார்க்க முடிகிற செங்குத்தான சிகரமாக அவர் வாழ்வு இருந்தது.

"உதவுபவர்களை ஒதுக்கிவிட்டு, உதவிகளை மட்டும் ஏற்றுக்கொள்ளத்தான் இந்த உலகம் பழக்கப்பட்டிருக்கிறது, அம்மா. அதைச் சொல்லி என்ன பயன்? வாழ்வுக்காகத் தவிப்பவர்களால் வளமையைத் திருடியாவது அனுபவிக்கத்தான் தோன்றுமே தவிர, வற்றிப் போனவர்களை வைத்துக் காப்பாற்ற எப்படி முடியும்?"

நடந்த நிகழ்ச்சிக்குத் தொடர்பில்லாவிட்டாலும், மறைந்தநிகழ்ச்சிகளோடு ஒட்டுப்போட்டு நினைவுகளை உருவாக்குவதுமுதுமையின் இயல்புகளில் ஒன்று என்பதைத் தன் தந்தையோடு பழகுவதால் பத்மா உணர்ந்திருந்தாள். தொடர்ந்து பேச அவருக்கு வாய்ப்பளித்தால் துன்ப நினைவுகளைத் தோண்டியாவது எடுத்துக்கொண்டு வருவார் என்பது அவளுக்குத் தெரியும்.

"எனக்குப் பள்ளிக்கூடம் போக நேரமாகிவிட்டது, அப்பா" என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தாள் பத்மா.

நெடுநேரம் அந்த அறைக்குள்ளேயே உட்கார்ந்து தன் மனைவியின் படத்தையே பார்த்துக்கொண்டிருந்தார் தணிகாசலம் பிள்ளை. அவள் இவரைப் பொன்னாக மதித்தாள்; இவர் அவளை மண்ணென்றே நினைத்தார். இயற்கையின் நியதிப்படியே அந்த மண்ணுக்குள்ளேதான் இந்தப் பொன் இருந்தது. மண்ணை விட்டுப் பிரிந்தபிறகு இந்த உலகம் அவரை உருக்கித் தன் இஷ்டத்துக்கு உருவாக்கித் தொல்லை கொடுப்பதை அவரால் தாங்கவே முடியவில்லை. கண்ணை மூடுவதற்காகக்காத்திருந்தார் இவர். ஆனால்... தன்னைக் காத்தவள் ஒப்படைத்துப் போயிருக்கிற பெரும் பொறுப்பு...!

பத்மாவுக்கு ஒரு எதிர்காலம்...! இறந்தகாலமாக அவள் தாயிருந்தாள்; நிகழ்காலம் இவராக இருக்கிறது; எதிர்காலமாக இருக்கப் போகிறவன்...! தன் மகளுடைய வாழ்வு பூத்த மலராகத்தான் இருக்க வேண்டும். புகையும் அடுப்பாக ஆகவே கூடாது.

தவறிக்கூட அடுப்பங்கரைப் பக்கம் கால்வைக்கும் நிலை ஏற்படவே கூடாது தன் மகளுக்கு என்று ஏற்கனவே அவர் செய்திருந்த முடிவு, அவருடைய நினைவுக்கு வந்தது. எப்படியாவது அவளைப் படிக்கவைத்து வேலைக்கு அனுப்பிவிட்டால்... ஏவல் செய்ய எவராவது கிடைப்பார்கள். இல்லறத்தை இவளும் 'அவரு'ம் இன்பமாக நடத்துவார்கள். அடுப்பங்கரையை மட்டும் துண்டித்துவிட்டால்...... அவளுக்கு ஏற்பட்டது இவளை அண்டாமல் எட்டவே இருந்துவிடும்.

"நான் போய்வருகிறேன், அப்பா!" என்று பத்மா விடை கேட்டபோதுதான் அவர் தன்னுணர்வு பெற்றார்.

"இன்று ஒரு நாள் போகாவிட்டால் என்ன, அம்மா?" வேண்டுகோளாக வெளிவந்தன அவரிடமிருந்து இந்தச் சொற்கள்.

"எல்லாம் சரியாகிவிட்டதா என்று முன்னமே போய்ப்பார்த்துவிடவேண்டாமா, அப்பா" என்றாள் அவருடைய மகள்.

தன்னுடைய பெண்ணை எதிர்த்துப்பேசப் பழகவில்லை அந்தத் தந்தை.

"முத்துமாலே அணிபவர்கள், அதற்காக அடக்கப்பட்ட மூச்சுகளைப்பற்றி நினைப்பதே இல்லை, அம்மா!"

முழுதையும் கேட்கக் காத்திருக்க வில்லைத் தன் மகள் என்பதை உணர்ந்தார் அவர். விட்ட இடத்திலிருந்து எதிர்காலத்தைத் தன் இதயத்தில் உருவாக்க முனைந்தார்.

பத்மா பள்ளிக்கூடத்துக்குப்போக வில்லை. நேரே விமலாவின் வீட்டுக்கு அவளுடைய புத்தகங்களை எடுத்துக்கொண்டு சென்ருள். வழியெல்லாம் வாதங்களையும் வசவுகளையும் உருவாக்கிக்கொண்டே நடந்தாள். நெஞ்சுகலந்து உறவாடிய ஒரு அன்புத் தோழியைச் சந்திக்கப்போகிரேம் என்ற நினைவே எழவில்லை அவளிடம். பரிதாபத்துக்குரிய ஒரு இளைஞனுக்கு ஏற்பட்ட அநீதிக்குத் தீர்ப்புக்காண வழக்குமன்றம் செல்வதுபோலவே இருந்தது.

இவளைப் பார்த்தவுடன் ஓடிவந்து வரவேற்ருள் விமலா. உடனே தன் அறைக்குள் இழுத்துச்சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டாள். எல்லாவித உணர்வுளும் அவள் முகத்தில் தோன்றி இடம்பிடித்துக்கொள்ள ஒன்ருேடொன்று போராடின. வராதிருந்தால் நன்ருக இருக்குமே என்று எண்ணியிருந்த அவளுக்கு, வந்துவிட்டாளே என்ற ஏக்கம் தோன்றியது.

"வா பத்மா. உன்னைப் பார்க்க வரலாம் என்றிருந்தேன். நேற்றே போலீசில் புகார்செய்துவிட்டோம்" என்ருள் விமலா.

நிதானம் தவறிவிடுவோமோ என்ற அச்சத்தால் நெஞ்சை அடக்கிவைத்தாள் பத்மா. வேகத்தைக் கட்டுப்படுத்தியதால் வெப்பம் நிறைந்தது அதில், மெள்ளப் புகையத் தொடங்கிற்று.

"அப்படியாளுல் நீ சிறையில் அல்லவா இருக்கவேண்டும்; இங்கே இருக்கிருயே!"

"என்ன பத்மா, இப்படிப் பேசுகிருய்?" என்ருள் விமலா.

"வரச்சொன்னது நீ — பழியேற்பது அவரா?"

வீழ்ந்த விலங்கு வேடனைப் பார்ப்பதுபோல விமலா பத்மாவைப் பார்த்தாள். அப்போதுதான் மறைந்த கதிரவன் இருந்த திக்கை, அதுவரையில் விரிந்திருந்த மலர் பார்த்தால் எப்படியிருக்குமோ, அப்படியிருந்தது விமலாவின் நிலை—வேதனையை நீராக்கி வெளியே கக்கின அவள் விழிகள்!

"வா, பத்மா! உட்கார்ந்து கேள் என் கதையை. என் மனதுக்குள்ளேயே இருந்து மக்கிப்போக வேண்டும் என்று நான் நினைத்திருந்த நிகழ்ச்சிகளை எப்படியோ வெளிப்படுத்த நேர்ந்ததற்கு வேதனைப்படுகிறேன். இருந்தாலும், என்னுல் உனக்கேற்பட்ட அவமானம், என்னை இழிந்தவளாக மதிப்பிடத் தூண்டுகிறது. இதைச் சகிக்கவே முடியவில்லை என்ருல். நான் சொல்வதைக் கேள். தவறு என் மேல் இருந்தால் நீ இடும் தண்டனையை ஏற்றுக்கொள்ளுகிறேன்."

உள்ளத்தை ஒரு நிலையில் உறுதியாக இருக்கச் செய்வது என்பது மிக மிகக் கடினமான வேலை என்பதை உணர்ந்தாள் பத்மா. அழுது கொண்டிருந்த தன் தோழியை அமரச் செய்து அணைத்துக்கொண்டே அவள் கூறியதைக் கேட்கத் தொடங்கினுள்.

(தொடரும்)

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

தான். அந்த உள்ளம் எத்துணை மென்மை நிறைந்தது. அந்த மென்மையைச் சிறிதளவு கடுமை கலந்த வன்சொற்கள் தாக்கினுலும், அதனைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றலை இழந்து, அது எவ்வளவு விரைந்து குழைந்து, அலமந்துவிடுகிறது என்பதை இப்போதுதான் உணர்ந்தான். வேடிக்கை செய்ய முனைந்த சுந்தரவதனம் வேதனைக் காட்டின் மத்தியில் சிக்கிக் கொண்டான்.

வாக்கினில் பெற்றுள்ள மென்மையையும், நோக்கத்தில் கொண்டுள்ள மென்மையையும், தோற்றத்தில் அடைந்துள்ள மென்மையையும், எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளத்திலே நிலவிக் குலவுகின்ற மெல்லியல்புகளையும் சவாலுக்கழைத்துத் தோற்கடிக்கச் செய்யும் மிகமிக மென்மை பொருந்திய உடலமைப்பைக் கொண்டவள் சந்திரா எந்த நோயையும் தொலைவில் கண்டவுடனேயே போ, போ என்று விரட்டியடிக்கும் தன்மையை இழந்து, வா வா என்று வணங்கி வரவேற்றுப் பணிந்து கொடுக்கும் வலுக்குறைவை அப்பட்டமாகக் கொண்டது அவள் உடல் நிலை.

ஒருபுறம் பார்த்தால் உள்ளத்தில் எழுந்த சூடு அவ்வளவு விரைந்து உடலையும் பற்றிக்கொண்டது விந்தை இல்லை என்று தோன்றும். பிறிதொரு புறம் சின்னஞ்சிறிய நிகழ்ச்சியொன்று, சற்றே தன் மெல்லிய அலைக்கரத்தை நீட்டிக் காட்டிவிட்டு அடங்கிப் போய்விடவேண்டிய தன்மைகொண்ட நிகழ்ச்சியொன்று இவ்வளவு பெரிய சூட்டை உள்ளத்தே எப்படி ஏற்றிவிட்டது என்பது விந்தையாகவும் தோன்றும்.

உடனே டாக்டர் வந்தார் "பெரிதொன்றும் இல்லை. சும்மா வெறும் கொதிப்பு. காலையில் எல்லாம் சரியாகி விடும்" என்ருர். 'எதற்கும் மருந்து கொடுத்துவிட்டுப் போகிறேன்' என்று எதையோ கொடுத்து விட்டுப் போனுர்.

மருத்துவரைத் தவிர, நோயைப் பற்றிய தன்மையை வேறு யார் உறுதியாகக் கூறமுடியும்? காலையில் எல்லாம் சரியாகிவிடும் என்று அவரே கூறுகிருர். பிறகு கவலை ஏன்?

சுந்தரவதனம் கனங்குறைந்த மனத்தினனுகப் படுக்கைக்குச் சென்ருன்.

மறுநாட் காலை, முதல் நாள் நிகழ்ந்தனவெல்லாம் வெறும் கனவாகத் தோன்றின சந்திராவுக்கு. என்ருலும், அந்தக்கனவு ஏதோ ஒருவகை உளைச்சலை உள்ளத்தே ஏற்றிவிடும் தன்மையை இன்னும் பசுமையாக வைத்துக்கொண்டிருந்தது. சந்திராபடுக்கையினின்று எழ முயன்ருள். ஏனே அவளால் எழ முடியவில்லை. உடல் தென்பிழந்து போய்விட்டது. அதில் சூடோ குளிர்மையோ மிகுதி இல்லை. நோயின் அறிகுறி தென்படவே இல்லை. என்ருலும், எழ முடியவில்லை. எழலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டாள்.

சுந்தரவதனம் துயில் கலைந்ததும் சந்திராவிடம் ஓடிவந்தான் — அவள் எழுந்துவிட்டிருப்பாள் என்ற எண்ணத்தோடு. அவன் திகைத்தான்.

"உடம்பு எப்படி இருக்கிறது?"

முதுகையும், நெற்றியையும் தொட்டுப் பார்த்துவிட்டு, கையைப்பிடித்துப் பார்த்துவிட்டு வினவினுன்.

சந்திரா பதில் பேசவில்லை. முதல் நாள் நிகழ்ச்சியை அவள் உள்ளம் நன்ருக அசைபோட்டுக்கொண்டிருந்தது. 'என் உடம்புக்கு ஒன்றுமில்லை, நீங்கள் உங்கள் வேலையைப்பார்த்துக் கொண்டு போங்கள்' என்று வெடுக்கென்று கூறிவிடவேண்டும்போல் தோன்றியது அவளுக்கு. என்ருலும் பேசவில்லை அவள்.

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சற்றுநேரம் சுந்தரவதனம் மௌனமாக நின்றான் அங்கே. திடீரென்று அலுவலகத்தில் குவிந்து கிடக்கும் இரண்டு நாள் வேலைகள் அவன் உள்ளத்தில் வந்து அழுத்தின. அவன் சடக்கென்று திரும்பிப் பரபரப்போடு நடந்தான். 'டாக்டர்தான் சொல்லி விட்டாரே, அவள் உடம்புக்கு ஒன்றுமில்லை என்று. மாலையில் எல்லாம் சரியாகிவிடும்' என்று உள்ளுக்குள் சொல்லியபடி கிளம்பினான் அவன். அவசரத்தோடு அவசரமாக மாடிக்கு ஒரு நடை ஓடிப்போய் முதல் நாள் வைத்த செடிகளை ஒருமுறை நோட்டமிட்டான். அதற்கென்று நியமிக்கப் பட்டிருக்கும் வேலையாளிடம் சில யோசனைகளைக் கூறிவிட்டு வந்தான்,

சுந்தரவதனம் பரபரப்போடு போனதைச் சந்திரா வேறு மாதிரி எடுத்துக் கொண்டாள். திரும்பவும் உள்ள ஊசலாட்டம் தொடக்கமாயிற்று. அவள் படுத்தபடி கிடந்தாள், எழவேண்டும் என்ற முயற்சியை மறந்துவிட்டாள், மறுபடியும் உள்ளம் மெல்ல மெல்ல வெம்மை கண்டது. மறுபடியும் உடலில் மெல்ல மெல்லச் சூடேறிக் கொண்டு வந்தது.

எதிரிலிருந்த தொலைபேசி அழைத்த போது "சீக்கிரம் வாருங்கள். சந்திரா அம்மா மயக்கம் போட்டுக் கிடக்கிறார்கள்" என்று தன் வீட்டிலிருந்து அறிவிப்பு வரும் என்று சுந்தரவதனம் எதிர்பார்க்கவில்லை,

எல்லாவற்றையும் போட்டது போட்டபடியே விட்டுவிட்டு விரைந்தான் சுந்தரவதனம். தனக்கு முன்னே டாக்டரின் கார் வீட்டெதிரில் நிற்பதைக் கண்டான். பதறியடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்,

சந்திரா பேச்சு மூச்சற்றுக் கிடந்தாள். உடல் சூடு குறைந்திருந்தது. பேச்சு மூச்சற்ற நிலை மாறும் வகையில், வேண்டும் அளவு உடலுக்குச் சூடேற்றும் செயலில் மருத்துவரும், உடன் வந்திருந்த தாதியும் ஏதேதோ சிகிச்சைகள் செய்துகொண்டிருந்தனர்.

"சார், சார், மருத்துவமனைக்கே எடுத்துச் செல்லலாம் சார்..." என்று பெரும் பதட்டத்தோடு தென்பிழந்த குரலில் கூறியபடி சந்திராவை நெருங்கினான் சுந்தரவதனம்,

"சற்றுப் பொறுங்கள். அருகில் நெருங்காதீர்கள். இன்னும் சற்று "மாஸ்ஸேஜ்" செய்து பார்க்கலாம். மயக்கம் நீங்கட்டும். பிறகு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம். பதறாதீர்கள்!" என்று கூறியபடி மருத்துவர் சிகிச்சை புரிவதில் ஈடுபட்டார்.

மருத்துவரும், தாதியும் ஒரு மணி நேரம் புரிந்த சிகிச்சை எனும் போராட்டத்திற்குப் பிறகு, சற்றே கண்களைத் திறந்து பார்த்தாள் சந்திரா. தன்னைச் சுற்றிலும் மருத்துவரும், தாதியும், தன் கணவனும், மற்றும் எதிர்பாராத யார் யாரோ உறவினரும், நட்பினரும் சூழ்ந்து நிற்பதை வியப்போடு உற்று உறுத்தும் கண்களை அடிக்கடி மூடி மூடித் திறந்தபடி நோக்கினாள் சந்திரா.

"ஏன், எனக்கென்ன? இவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்?" தனக்குள் முனகலாக வினவிக்கொண்டாள் சந்திரா.

"சரி, இப்போது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதுதான் நல்லது" என்றார் மருத்துவர்.

சட் என்று அருகில் வந்தான் சுந்தரவதனம்—சந்திராவைத் தூக்கி எடுத்துச் செல்வதற்கு.

"இல்லை, நானே எழுந்து நடப்பேன்" என்று முனகியபடி எழமுயன்றாள் சந்திரா. முடியவில்லை எழுவதற்கு. அருகில் நின்ற தாதி உதவி புரிந்தாள். மெல்ல எழுந்தாள் சந்திரா, தாதியின் தோளைப்பற்றிக் கொண்டு மெல்ல மெல்ல வெளியே வந்தாள்.

சுந்தரவதனம் அழாமல் இருந்தது பெரு முயற்சி.

இன்றும் மருத்துவர் ஆறுதல் சொன்னார்.

"வேறொன்றும் இல்லை. ஏதோ மன அதிர்ச்சி. எனினும், அதற்கு இத் துணை ஆற்றல் இருந்ததை இதுவரை நான் கண்டதில்லை. அதற்காக நீங்கள் பயப்படாதீர்கள்! தக்க சமயத்தில் என்னை அழைத்தீர்களே, அது மிகமிக நல்லது. கவலைப்படாதீர்கள், நான் முடிந்தமட்டும் பார்க்கிறேன்" என்றார் மருத்துவர்.

மருத்துவரின் வார்த்தையில் சுந்தரவதனத்திற்கு இன்று நம்பிக்கை இல்லை. 'இதே மருத்துவர்தானே நேற்றுச் சொன்னார் பெரிதாக ஒன்றுமில்லை என்று. இன்று பெரிதாகவே வந்துவிட்டதே!'

சந்திரா மருத்துவமனைக் கட்டிலிற் கிடந்தாள் அருகே சுந்தரவதனம் அமர்ந்திருந்தான். மருத்துவரும், தாதியரும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

"சார்; நீங்கள் வீட்டுக்குப் போய் வாருங்கள். பாவம், காலையிலிருந்து பட்டினியாகக் கிடக்கின்றீர்களே! தென்பை இழந்துவிடாதீர்கள் மனத்தை அமைதிப்படுத்திக்கொள்ளுங்கள் ஒன்றும் வந்துவிடாது" என்று கூறியபடி மருத்துவர் சுந்தரவதனத்தின் தோளைப்பற்றி எழும்படி செய்தார். ஊர்தி நிற்கும் இடம்வரை அவனோடு வந்தார்.

எல்லாவற்றையும் சந்திரா குறுகுறுவென்று பார்த்துக்கொண்டிருந்தாள். அவளால் இயங்கமுடியாது. பேச முடிந்ததோ என்னவோ! பேசவில்லை. எண்ண முடிந்திருக்கலாம். அவள் இப்போது உள்ளதை உள்ளபடிதான் எண்ணியிருப்பாள். ஆனால், அவள் எதிர்பார்த்தாளா என்ன, அவனையும், அவள் எண்ணத்தையும் மீறிக் கொண்டு போய்விடும் அவள் உடல் நிலை என்று'

சுந்தரவதனம் அலுவலகத்தில் இருந்தான், அவன் மனநிலையை மற்றவர்கள் அறிவார்களா? யார்யாரோ எங்கெங்கிருந்தோ அடிக்கொருமுறை தொலைபேசியில் அவனை அழைத்துக்கொண்டிருந்தார்கள். எது எதைப்பற்றியோ விசாரித்துக் கொண்டும், அறிவிப்புகள் செய்து கொண்டும் இருந்தார்கள். அவன் வெறுப்போடு, சலிப்போடு வாயில் வந்ததைப் பிதற்றிவைத்துக்கொண்டிருந்தான் அவற்றிற் கிடையேதான் அந்தச் செய்தியும் வந்தது.

"சார், காரியம் மிஞ்சிவிட்டது சார்!"

அவன் அலறித்துடிக்கவில்லை. அடித்துப் புரளவில்லை. திகைத்துத் தடுமாற நேரமில்லை அவனுக்கு. மயக்கம்போட்டு அப்படியே கீழே சாய்ந்தான்.

உலகம் ஒரு நாடகமேடை என்று சொன்னவன் அதை வேறுவிதமாக இன்னும் அழுத்தமாகச் சொல்லி இருக்கலாம். நீர்மேல் எழுத்தாகும் யாக்கை என்று சொன்னவன் அதன் விரைவுக் குறைவைப் போக்கி இருக்கலாம். ●

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.